உ

சிவமயம்.

# திருவிடும்பாவனத் திருக்கோயில் வரலாறு



திருவிடும்பாவனத் திருக்கோயில் தோற்றம்.

T13980

வன தேவஸ்தான வெளியீடு.

R005C02

1948.

T.13980

உ

சிவமயம்

# திருவிடும்பாவனம்

## திருக்கோயில் வரலாறு.

திருவிடும்பாவனம் தேவஸ்தானத்தில்

சர்வதாரி௵ ஆனிமீ ௨௰௨ (12—7—48) நடைபெறும்,

ஸ்ரீ மங்களநாயகி சமேத ஸ்ரீ சற்குணநாதேஸ்வரஸ்வாமி

மகா கும்பாபிஷேகத்தின் நினைவு மலராக

வெளியிடப்பெற்றது.

விலை அணா 0—8—0.

1948.

உ

திருச்சிற்றம்பலம்

# முன்னுரை

எம்மதமும் சம்மதம் என்பது சைவசமயம். எம்மதத்தினுள்ள கொள்கைகளையும் தன்னுள் கொண்டிருப்பது சைவசமயம். நிறவேறுபாடு, சாதிவேறுபாடு இவைகளை ஒழித்திருப்பது சைவசமயம். Cosmopolitanism of Saivaism என்ற, சென்னை பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர் திரு. இராமச்சந்திர தீக்ஷிதர் எழுதிய பெருங்கட்டுரை இதை விளக்கமாக எடுத்துக்காட்டி நிற்கின்றது.

சைவசமயம் என்பது கருத்துப்பொருள். கோயில் அதன் பருப்பொருள் என்னலாம். கோயிலில், அருவமாகவும், உருவமாகவும், அருவுருவமாகவும் கடவுளைக் காண்கின்றோம். அருவுருவமே சிவலிங்க வடிவம்.

ஆக சைவசமயக் கொள்கைகள் அனைத்தையும் உலகினர்க்குத் தூல உருவாக்கிக் காண்பிப்பது கோயில். மற்றும், மொழி வரலாறு நாட்டின் வரலாறு, அரசியல் அறிவு, சமய அறிவு இவைகளின் வரலாறு, சிற்பக்கலை வரலாறு, நாட்டியக்கலை ஆகியவைகளின் கருவூலமே கோயில். கோயிலின்றேல், நம் நாகரிகமே நீரின்மேல் எழுத்தாகியிருக்கும்.

அன்றியும், கலைவளர்ச்சிக்குக் கோயில், அறிவு வளர்ச்சிக்குக் கோயில், நம் வாழ்க்கையுடன் பின்னிக் கிடப்பது கோயில். கோயிலின்றேல் நம்வாழ்க்கையில்லை என்னும்படி அமைவுற்றிருக்கும் கோயிலை இகழ்தல், தன்னையும், தன்னாட்டையும், நாகரிகத்தையும் இகழ்த லாகும். "தெய்வ மிகழேல்" என்ற வாக்கும் அதன் பொருட்டே.

கோயில்களின் இன்றியமையாமையும், பெருமையும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. சிறப்பாக திருஇடும்பா வனத்திலுள்ள கோயிலின் வரலாறு கொடுக்கப்பட்டிருக் கிறது. அதினின்றும் அத்தகைய வரலாறுகள் முக்கிய மானவை என்பது விளங்கும் இடும்பாவனத்துக்கு. அது இதுகாறும் வெளிவராதது வியப்புதான்.

அதில் கூறப்பட்டிருக்கும் பழங்கதைகள் சுவை தருவன. புது நாகரிகத்தில் "நாவல்கள்" பழமையில் "புராணங்கள்" இரண்டிற்கும் வேறுபாட்டை மக்கள் உணர்வர். பழங்காலத்தில் புராணங்களே மக்கள் மன தைக் கவர்ந்துநின்றன. மதங்களின் சிறந்த கருத்துக்களை அவை அடிப்படையாகக் கொண்டுள்ளவைகளாக இருப் பின் சிறப்புப் பெற்றன. இல்லாதவை ஒழிந்தன. இட வரலாறுகளும் அத்தகையவே.

அத்தகைய வரலாறு திருஇடும்பாவனத்துக்கு இப் பொழுது நடைபெறும் மகா கும்பாபிஷேகத்தின் சிறப்புச் சின்னமாக வெளியிடப்படுகிறது.

இவ்வரலாறு இவ்வூரில் வழங்கிவரும் பழங்கதைகளையும், கோயிலில் நடைபெற்றுவரும் கட்டளைகளையும், உபயங்களையும், கல்வெட்டுக்களையும்கொண்டு எழுதப்பட்டது. இதன் பழையவரலாறு பின்னத்தூர், திரு. நாராயணசாமி அய்யர் அவர்களால், தமிழில் செய்யுள் நடையில் இயற்றப்பெற்றுள்ளதாகத் தெரிகிறது. அது கிடைத்திலது. ஆனாலும் அதிலுள்ளகருத்துக்களே இங்கும் திகழ்கின்றன.

இதை உரைநடையில் ஆக்கியோர், கீழப்பெருமழை, வித்துவான், சோமசுந்தரனார் துணுக்குகளாகக் கிடந்த கதைகளை ஒரு தொடர்வுபடுத்தி இவ்வரலாற்றுக்கு வடிவு கொடுத்த அன்னவர்க்கு என் நன்றி உரித்தாகுகிறது.

என்னையும் இப்பணியில் ஈடுபடுத்திய இறைவன் திருவிளையாட்டுக்கு இறும்பூதுஎய்தி, கடவுளறிவு மேலும் தழைத்து, கடவுளன்புபூத்து உலகை ஆட்கொள்ள வேண்டும் என இறைஞ்சி இதை முடிக்கின்றேன்.

இக்கோயிலுக்கு இனும், பட்டா, தோப்புத்துறவு, நிலங்கள் உள்பட கூடுதல் 2159 ஏக்கர் உள்ளன. தென்னை மரங்களில் 30000 உள்ளன. வருஷ வரவு செலவு தற்போது, 1357-ம் பசலி போர்டார் டிமாண்ட் படிக்கு ரூ. 58000.

இங்ஙனம்,
K. முருகையா பிள்ளை,
நிர்வாக அதிகாரி.

உ

# பொருளடக்கம்.


| எண். | பொருள். | பக்க எண். |
|---|---|---|
| 1. | தோற்றுவாய் | 1 |
| 2. | திருவிடும்பாவனம் திருக்கோயிலின் பழைமை | 4 |
| 3. | பிருமாண்டபுராணச் சான்று | 7 |
| 4. | இடும்பை வரலாறு | 9 |
| 5. | தேவாரச் சான்றுகள் | 23 |
| 6. | தேவாரகாலத்தின் பின்னர் | 35 |
| 7. | கன்னபரம்பரைச் செய்திகள் | ,, |
| 8. | திருக்கோயிற் றிருப்பணி | 38 |
| 9. | தருமகருத்தர்கள் | 40 |
| 10. | வில்வவன மான்மியம் | 41 |
| 11. | முதல் அத்தியாயம் | 42 |
| 12. | இரண்டாம் அத்தியாயம் | 49 |
| 13. | மூன்றாம் அத்தியாயம் | 52 |
| 14. | நான்காம் அத்தியாயம் | 55 |
| 15. | ஐந்தாம் அத்தியாயம் | 60 |
| 16. | ஆறாம் அத்தியாயம் | 64 |

உ

சிவமயம்

# திருவிடும்பாவனம்

## திருக்கோயில் வரலாறு

### தோற்றுவாய்

திருச்சிற்றம்பலம்

பசுபதியாகிய இறைவன் திருவருளால், பெறுதற்கு அரிய இம்மானிடப் பிறவியை எய்தினவர், தங்கள் மனம் மொழி மெய்களால் அக் கடவுளை நினைந்து, வாழ்த்தி, வணங்கி, மெய்யுணர்ந்து வீடு பெறுதலே செய்தற்குரிய செயலாம். மனத்தால்

கடவுளை வழிபடுதலாவது: எப்பொழுதும் தியானம் செய்தலாம். கடவுளின் திருநாமங்களை ஓதுதலும், தேவாரம், திருவாசகம் முதலிய நூல்களை ஓதுதலும் வாக்கால் வழிபடுதலாகும். மெய்யால் (உடலால்) வழிபடுதலாவது: திருக்கோயிற்றிருப்பணி செய்தல், திருக்கோயிலை வலம் வருதல், வணங்குதல், கும்பிடுதல், பணிதல் முதலியனவாம். இங்ஙனம், மனம் முதலிய மூன்றாலும் கடவுளை வழிபடுவதல்லது, வீடு பெறுவதற்குச் சிறந்த உபாயம் வேறில்லை. இல்லையாகவே, இவ்வரிய மானிடப் பிறவியின் பயனை இழந்தவராகின்றோம்;

"மானிடப் பிறவிதானும் வகுத்தது மனவாக் காய
மானிடத் தைந்துமாடும் அரன்பணிக் காக வன்றோ?
வானிடத் தவரும்மண்மேல் வந்தரன் றனையர்ச் சிப்பர்
ஊனெடுத் துழலும்ஊமர் ஒன்றையு முணரார் அந்தோ!"

என்னும் சிவஞானசித்தியார் திருப்பாட்டால் மனிதப் பிறப்பிற்குக் கடவுள்வழிபாடு இன்றியமையாது என்பதை அறியலாம்.

மனம் முதலிய மூன்று கருவிகளாலும், கடவுள் வழிபாடு செய்வதற்குத் திருக்கோயில்களே சிறந்த இடமாகத் திகழ்கின்றன. "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்னும் ஔவையார் வாக்குத் திருக்கோயில் வழிபாட்டின் நன்மையை விளக்குகின்றது.

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே! நீவா!
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி
அலைபுனல்சேர் செஞ்சடைஎம் ஆதி! என்றும்,
ஆரூரா என்றென்றும் அலறா நில்லே"

என்னும் அருமைத் திருத்தாண்டகத்தால் திருக்கோயில் வழிபாட்டின் பயனும், வழிபாடுசெய்யும் முறையும் நன்ருக உணரப்படும்.

மானிடப் பிறவியின் பயனை அடைவதற்கு ஆலயவழிபாடு இன்றியமையாது என்பதைக்கண்ட நம்பெரியோர்கள் நம்முடைய நாடெங்கும், வியக்கத் தகுந்த மாபெருங் கோபுரங்களுடன் கூடிய திருக்கோயில்கள் கட்டியுள்ளனர். அத்திருக்கோயில்களில், கண்கவர் சிற்பக்கலைகளையும், ஓவியக்கலைகளையும் வளர்த்தனர். நம் திருக்கோயில்களில் காணப்படும் பண்டைக்காலத்துச் சிற்பக்கலைகளைக் கண்டு அயல்நாட்டினரும் பாராட்டுகின்றனர். கலை உணர்ச்சியினின்றே கடவுள் உணர்ச்சி தோன்றுகின்றது, என்பது நம் முன்னோர் துணிபாம். ஆதலின், மாபெருஞ் சிறப்பை மனிதர்க்கு ஆலயங்களே தரவல்லன என, அவ்வாலயத் திருப்பணியில் நம் பாரதநாட்டுப் பெரியோர் — அவருள்ளும் நம் செந்தமிழ்நாட்டுச் சீர்பெறுசான்றோர் பெரிதும்

முயன்றனர். பண்டைப் பெரியோர்களுடைய நன் முயற்சியால் தோன்றிய திருக்கோயில்கள் பற்பல. அவற்றில் சில எக்காலத்தில், யாரால் அமைக்கப் பட்டன என்று வரலாற்று நூலாசிரியராலும் வகுத் துரைக்க வியலாப் பழங்காலத்தனவாகும். அப் படிப்பட்ட பழைய திருக்கோயில்களுள் இந்தத் திருவிடும்பாவனம் திருக்கோயிலும் ஒன்று, என்று அறிக.

### திருவிடும்பாவனம்

## திருக்கோயிலின் பழைமை.

நம் தெய்வத் தமிழ்மொழி எந்தக்காலத்தில் தோன்றியது? அத் தமிழ் தழுவிவளர்ந்த சைவ சமயம் எந்தக்காலத்தில் தோன்றியது? அச் சைவ சமயம் சாற்றும் ஆலயவழிபாடு எந்தக்காலத்தில் தொடங்கியது? இந்த மூன்று வினாக்களுக்கும் ஒரே விடைதான் உள்ளது. அஃதாவது:— தெரிந்திலது என்பதேயாம். காலங்கணித்தறிய வியலாத நெடும் பண்டைக்காலமாகத் தமிழ்மக்கள், ஆலயவழிபாடு செய்து வருகின்றனர், என்று தெரிகிறபடியால், தமிழர் பழங்கோயில்களின் வரலாற்றை அறிவதும் அருமையாகின்றது. ஆயினும், பண்டைநாள் தமிழ்

நிலத்தாரின் பண்புணர்ந்தோர், தமிழ் நாட்டில் முதன்முதலாக ஆலயவழிபாடு எங்ஙனம் தோன்றி இருத்தல் கூடும் என்று ஆராயின், பின்வருமாறு ஓர் முடிவு தோன்றும்; அஃதாவது:—

எண்ணுவதற்கியலாத பழங்காலத்தில் தமிழ் மக்கள் தங்களோடு வாழ்ந்தவர்களில் சிறந்த பெரியோர்களைத் தெய்வமாகவே போற்றி வந்தனர். வாழ்க்கைத்துறைகளில் ஒருதுறையிலோ? பல்வேறு துறைகளிலோ? சிறப்புடையோரை, அவர் இறந்த பின்னர் தெய்வமாகக் கொண்டனர். சிறந்த கற்புடைய மடந்தையர்க்குக் கல்நட்டுப் பூசைசெய்து போற்றிய வரலாறும், போர்க்களத்தில் அஞ்சாது நின்று பகைவரால் விழுப்புண்பட்டு இறந்த வீரர்களுக்கு வீரக்கல்நட்டுப் பலிகொடுத்து வணங்கிய வரலாறும், "காமவெகுளி மயக்கம்" களைந்து அருள் உருவமாகிநின்ற ஞானியர் அடங்கியபின், அவ்விடத்தேயும் கல்நட்டு வணங்கிய வரலாறும் தமிழரின் ஆலயவழிபாடு தோன்றியவிதத்தை அறிவிக்கின்றன. பொறிபுலன் அடங்க நின்று தவஞ் செய்திருந்த ஞானியர், இறந்தபின்னர் அவர்களது ஞாபகச்சின்னமாக நடப்பட்ட கற்களே நாளடைவில் சிவலிங்கவுருவங்களாயின. மாபெருந்துறவியர் உடலம் அடக்கம்செய்யப்பட்ட நிலமே இற்றைநாட் பழம்பெருங் கோயில்களாகக் காட்சியளிக்கின்றன. இங்ஙனம் எண்ணுவது உண்மையென்று கொள்

ளின், நிலப்பகுதியில் திருக்கோயில் தனிச்சிறப் புடையன, என்று எண்ணுதலும் நேர்மையே ஆகின்றது.

"பிறப்பறுக்கலுற்றார்க்கு உடம்பும் மிகை" என்பது தமிழர் துணிபு. பற்றுதற்கு ஏதுவிலாது

"நீர்பலகான் மூழ்கி நிலத்தசைஇது தோலுடை யாச்
சோர் உடைதாழச் சுடரோம்பி — ஊரடையார்
கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல்
வானகத் துய்க்கும் வழி"

என்பதும், தமிழ் மக்களின் கொள்கை. ஆதலால், செந்தமிழ்நாட்டுத் துறவியர் பலர், காடுகளில் வசித் தனர். இங்ஙனம் காடுகளிலும், மலைகளிலும், குகை களிலும் வசித்துவந்த ஞானியரை, நாட்டில்வாழ்ந்த இல்லறத்தார் அறிந்திருந்தனர். அத்துறவியர் இறந்தபின்னர், அந்தக்காட்டினுள்ளும் சிவலிங்கப் பிரதிட்டைசெய்து ஆலயம் எடுத்தனர். இக்கார ணத்தால், நமது ஆலயங்களில் பல, கானகங்களிலே அமையலாயின. "கானகங்களிலேயே மானிட நாக ரிகம் தோன்றிற்று" என்னும், சரித்திர ஆசிரியர் கூற்றும், இக் கோயில்களின் பழமைக்கு ஆதரவு அளிக்கின்றது. காட்டினுள் அமைந்த ஆலயங்கள், நாளடைவில் காடு நாடாகிவிட்டமையால், தம் பெய ரால் மட்டும் இவ்வுண்மையை விளக்குகின்றன. "திருமறைக்காடு", "இடும்பவனம்", "தில்லை"

முதலியன, காட்டினுள் அமைந்த பழங்கோயில்களாகும். இவ்வாற்றால், இத் திருவிடும்பாவனம் மிகப் பழையதிருப்பதி என்று உணர்தல் வேண்டும்.

## பிருமாண்டபுராணச் சான்று.

இனி, இந்தத் திருக்கோயிலின் பழமைக்குச் சான்றாகும் பிருமாண்டபுராணச் செய்தியைக் காண்போம். இத்திருப்பதியைப்பற்றிப் பிருமாண்ட புராணக்கூற்று வருமாறு:—

"பிரம்மகர்ப்பம்," என்று கூறப்படும், ஊழியின் கடைசிக்காலத்தில், உலகம் படைக்கத் தொடங்கிய நான்முகன், தன்பால், அப்படைப்புத் தொழிலுக்கு இன்றியமையாத சத்தியில்லாமை கண்டு, வருந்தினன். சிருட்டிக்கும் சத்தியில்லாமையால், அந்தச் சத்தியை எப்படிப் பெறலாம் என்று சிந்தனை செய்தான். மனத்திற்குச் சத்தியாவது:— சத்துவகுண நிறைவே ஆகும். அந்தச் சத்துவ குணத்தை எவ்வாறு பெறக்கூடும்? அக்குணம் மாபெருந் தவத்தால் பெறப்படுவது; ஆதலால், பிரமன் தவஞ்செய்ய எண்ணினன். அதற்குத் தகுந்த இடம் வேண்டும். நீண்ட நேரம் சிந்தனை செய்து, சத்துவகுண நிறைவைப் பெறு

தற்குத் தவஞ்செய்ய, இத்திருவிடும்பாவனம் என்னும், அடர்ந்த காட்டையே தேர்ந்துகொண்டான்.

திருவிடும்பாவனம், எக்காரணத்தால் சத்துவ குணப் பேற்றிற்குத் தகுதியாயது? இம் மாபெரும் பூமியினது நடு விடத்தின் சிறிது வடபகுதியில் உள்ளது இவ்விடும்பாவனம். பூமியின் நடுப்பகுதி மிகுதியான வெப்பம் உடையதாகும். தென் பாகமோ, மாபெருங் கடல்; பூமியின் வடபாகத்தில், இயமமலைப் பகுதியும் அதைச் சார்ந்த நாடுகளும் மிகுதியும் குளிருடையபகுதிகளாம். ஆதலால், இவ் விடும்பாவனம் அமைந்துள்ள பகுதியே சமமான தட்ப வெட்ப முடையதென்று அறிதல்வேண்டும். இனிச் சத்துவகுணத்தின் தன்மையோ, இன்ப துன்பம் சமமாகக்கொள்ளும் ஓர்குணமாம்; விருப்பு வெறுப்பில்லாத மேன்மை நிலையாம்; வேண்டுதல் வேண்டாமையில்லாத சாந்த நிலையாம். ஆதலின், நிலப்பகுதியில் மிகையான குளிராதல், மிகையான வெப்பமாதல் இல்லாமல், அவை சமநிலைப்படும் பகுதியாகிய இத்திருப்பதியே, சத்துவகுண வளர்ச்சிக்குத் தகுதியாயது; என மலரவன் மனத்தில் எண்ணினன்போலும்!

இவ்வாற்றால், இத்திருப்பதியைத் தேர்ந்துகொண்ட நான்முகன், இத்திருப்பதியாகிய காட்டினுள் புகுந்து, இக்காட்டினுள் வில்வமரங்களே

செறிந்திருந்த ஓர் பகுதியை அடைந்து, அவ்விடத்தில் மனம் பொறிவழிப் புலன்களில் செல்லாமல் அடக்கி, எண்ணுதற்கினிய செஞ்சடைக் கடவுளின் சேவடியையே சிந்தையில் வைத்து, பல்லாயிரம் பருவம் அரிய தவம் ஆற்றினான். அவனது தவநிலை கண்டு, கடவுள் மகிழ்ந்து வெள்ளை விடையின்மேல் அம்மையுடனும், கணபதி முருகன் முதலிய மக்களுடனும், ஏனைய சிவகணஞ் சூழ எதிர்வந்து தோன்றி, நான்முகன் குறையை அகற்றிப் படைப்பாற்றல் அருளி மறைந்தான். எண்ணியது எய்தப்பெற்ற படைப்புக்கடவுள், மிக மகிழ்ச்சியுடையவனானான். தனக்குப் பெரும்பேறளித்த இவ்விடும்பாவனத்தில் திருக்கோயில் எடுத்துத் தன் பெயரால் "பிரமதீர்த்தம்" என்ற திருக்குளமும் தொட்டு, வைகாசிப் பருவநாளில் திருவிழா நடத்தி, வணங்கிச்சென்றான். அந்த விழா, பிரமனால் தொடங்கப்பட்டதனால், "பிரமோத்ஸவம்" என்று, அழைக்கப்பட்டது; என்பது.

## இடும்பை வரலாறு.

இத்திருப்பதியின் பெயராகத் திகழும், இடும்பாவனம் என்பது, இனிய வரலாறொன்றனைத் தன்பால் கொண்டுள்ளது. இந்தப் பாரத

நாட்டில் இரு கண்கள் எனத் திகழும் இதிகாசம் இரண்டனுள் ஒன்றாகிய, மகாபாரதத்துள் அவ் வரலாறு காணப்படுகிறது. அது வருமாறு:—

செந்தமிழ் நாட்டில், கடல் அருகில் உள்ள **வில்வவனம்** என்னும் அடர்ந்த காட்டினுள், இடும்பன், இடும்பை எனப் பெயருடைய அரக்கனும், அரக்கியும் வசித்து வந்தனர். இவர்கள் இருவரும், ஒருதாய் வயிற்றில் பிறந்தவர்கள் ஆவர். இவர்கள், தங்கள் பிறப்பிற்கு ஏற்றபடியே அக் காட்டினுள் வாழும் விலங்கு, பறவை முதலிய வற்றைக் கொன்று தின்று, உடல் ஓம்பிவந்தனர். சில சமயங்களில், மனிதர் அகப்படினும் கொன்று தின்பர். இந்தச் சகோதரருள், இளையாளாகிய இடும்பை என்பவள், பண்டைப் பிறப்பில் நல்வினை பல செய்தவள். அவள், ஒருநாள் அந்தக் காட்டினுள் வில்வமரப் பொழிலில், பிரமதேவனால் அமைக்கப்பட்ட திருக்கோயிலைத் தற்செயலாகக் கண்டாள். பழம்பிறப்பின் நல்வினையே அந்தக் காட்சியை அவளுக்கு நல்கிற்று. அந்தக் காட்சியால், அவ்வரக்கி பத்திப்பரவசமடைந்தாள். அன்புடன் ஆலயத்துட் புகுந்தாள்; சிவலிங்கத் திருவுருவத்தை வணங்கினாள். அவள் உள்ளம், அன்று தொடங்கி இறை வழிபாட்டில் விருப்பமுடையதாயிற்று. ஆதலால், அன்று தொடங்கி ஒவ்வொருநாளும் திருக்கோயில் வழிபாடு செய்து

வந்தாள். இங்ஙனமாக இறைவனுடைய திருவருளுக்குப் பாத்திரமான, இடும்பையின் மனம், நாள்தோறும் தூயதாய்ப் பரிணமித்துவந்தது. அரக்கர்களுக்கு இயல்பாகிய, ஊன் உணவை வெறுத்தாள்; துறவிகளைப்போலக் காய்கனி கிழங்கு இலை முதலிய நல்லுணவையே உண்டாள். பல ஆண்டுகள் இவ்வாறு ஒழுகிவந்த அந்த அரக்கியின் உள்ளம் துறவியர் உள்ளம்போல் தூயதாகிவிட்டது. உருவத்தால் மட்டுமே அவள் அரக்கியாயிருந்தாள்.

கடவுள் அருட் பெருமையை யாரே அறிய வல்லார்; பண்டைப் பிறப்பில் இவ்விடும்பை சிவபுண்ணியம் செய்தவளாதல் வேண்டும். இடையே இயற்றிய தீவினைப் பயன் அரக்கப் பிறப்பை இவளுக்கு அளித்தது. இவள் வரலாறு கண்ணப்ப நாயனார் வரலாற்றை நினைப்பூட்டுகிறது. எல்லாம் வல்ல இறைவன் எண்ணினால் எத்தகைய அற்புதம் நிகழமாட்டாது! திருவருளே அந்த அரக்கியைக் காப்பாற்ற முன்னின்றால் அவள் பாக்கியம் எய்துதல் வியப்பல்லவே! இறைவன் அருளால் மேலும் அவள் எய்திய பெருமையை இனிச் சொல்லக் கேளுங்கள்.

வடநாட்டில் அந்தக்காலத்தில் சிறந்து விளங்கிய அரசர் மரபில், குரு மரபு தலைசிறந்ததாகும். அம்மரபில் தோன்றிய துரியோதனன் முதலிய

நூற்றுவர்க்கும், யுதிட்டிரன் முதலிய ஐவர்க்கும் தீராத பகைமை வளர்ந்து வந்தது. பொறுமையால், பாண்டவரிடத்தில் பகைமைகொண்ட துரியோதனன் பாண்டவரிடத்தில் அன்புடையவனைப்போல் நடித்தான். அரக்கினாலேயே ஆக்கப்பட்ட ஓர் மாளிகையில், பாண்டவரைக் குடி புகுவித்தான். அந்த மாளிகையில் தீயிட்டுப் பாண்டவரைக் கொல்லச் சமயம் நோக்கியிருந்தான்.

பாண்டவர்கள் வஞ்சகமறியா நெஞ்சினர். துரியோதனன் சூழ்ச்சியை அறியாமல் அந்த மாளிகையை அன்புடைமையால் தங்களுக்கு அளித்தான் என்று எண்ணினர். அதன்கண், மகிழ்ச்சியுடன் வசித்தனர்.

மாளிகைக்குத் தீயிடத் தகுந்தகாலம் இது வெனத் துரியோதனன், சகுனி முதலியோருடன் ஆராய்ந்து நிச்சயித்தான். இறைவன் அருளால் இச்செய்தியை அம் மாளிகை அமைத்த சிற்பி ஒருவன் அறியலானான். அந்தச் சிற்பி, தெய்விகமான சிற்பத்திறலுடையவன். அரக்கினால் மாளிகை அமைக்கும்படி துரியோதனன் தனக்குக் கட்டளை இட்டபோதே, இம்மாளிகை ஏதோ ஓர் வஞ்சக எண்ணத்தாலேயே கட்டப்படுகிறதென்று அவன் நினைந்தான். ஆதலால், அதில் வாழுபவர்களுக்கு ஆபத்து ஏற்பட்டால் அதிற்றப்புவதற்கு ஓர்

வழி செய்து அமைத்தான். அதாவது:— அம் மாளிகையின் உள்ளறைகளில் ஒன்றிலிருந்து ஒரு சுரங்கவழியமைத்தான். அந்தச் சுரங்கம் இடும்பை வசித்துவந்த வில்வக்காட்டில் முடிவடைந்தது. இவ்வில்வவனம் வரையில் சுரங்கம் அமைக்க அச் சிற்பி எண்ணியதேன்? அவன் எண்ணத்தில் சற்குணநாதன் திருவருளும் சிறிது கலந்தது போலும்!

இன்றிரவு அரக்குமாளிகை தீக்கிரையாக்கப் படும் என்ற, துரியோதனன் முடிவை, ஒரு நண்பன் வாயிலாய் அந்தச் சிற்பி அறிந்தான். அன்று மாலைக்காலத்தில் அரக்குமாளிகையின் பக்கத்தில் உள்ள ஓர் பூம்பொழிலில், உலாவிநின்ற வீமனைச் சிற்பி கண்டு வணங்கித் துரியோதனன் வஞ்சகத்தை விளம்பினன். அம் மாளிகையில் தீயிட்டால் தப்புவதற்குத் தான் செய்துள்ள இரகசியமான சுரங்கவழி யிருத்தலையும் கூறினன். சிற்பியின் அன்பையும், திறலையும் வியந்த வீமன், அவனுக்கு நன்றிகூறி விடையளித்த பின், விரைந்து மாளிகையை அடைந்து, சிற்பி கூறிய சுரங்க நெறியையும் அறிந்துகொண்டான். சிற்பியை மனத்தால் வாழ்த்தியபடியே, இரவை எதிர்பார்த்திருந்தான்.

துரியோதனன் மனம் போல, வையகம் இருண்டது. பாண்டவரில், வீமனை ஒழிந்தவரும்

குந்திதேவியாரும் நன்றாக உறங்கினர். சமயம் நேர்ந்த வீமன், தானே அந்த மாளிகையின் வடக் கிழக்குமூலையில் தீக்கொளுவி விட்டு, அதனுள் உறங்கிய சகோதரர்களையும், தாயையும் நித்திரை கலையாதபடி மெல்லெனத் தூக்கிக்கொண்டு, சுரங்க வழியிற் சென்று, இத் திருவிடும்பாவனத்தை அடைந்தான். எஞ்சிய இரவும், துயில்கலையாதபடி தழைகளால் படுக்கை யியற்றிச் சகோதரரையும், தாயையும் துயிலக்கிடத்தி, காட்டு விலங்குகளால் அவர்களுக்குத் தீங்கு நேராதபடி விழிப்புடன் காவல் செய்தமர்ந்தான்.

இஃது இவ்வாறாக, இரவின்கண் விழிப்புடைய இடும்பை, வைகறைக்கு முன்னரே தெய்வத் திருவருள் செலுத்துதலால், வீமனிருந்த இடத்தை யடைந்தாள். அவ்விடத்தில், அழகே ஓர் ஆணுருக் கொண்டு அமர்ந்திருந்தாற்போல, இருந்த வீமனை விழிக்கு விருந்தாகக்கண்டாள். கண்டவுடனேயே, அவள் உள்ளத்தில் காதல் உணர்ச்சி கரை கடந்து பொங்கித் ததும்புவதாயிற்று. தன் உள்ள நெகிழ்ச் சியைக் கண்ட இடும்பை, நாணமுற்றுத் தலை குனிந்து ஒருபுறம் ஒதுங்கி நின்றாள். அங்ஙனம் நின்றவளை, உருவத்தால் அரக்கி என அறிந்து கொண்ட வீமன், இவளால் தன் தாய் முதலியவர் களுக்கு தீங்குநேரவும் கூடும், என எண்ணி, அவளை நோக்கி, ஏடி! அரக்கியே! நீ இவ்விடம் விட்டு விரை

வில் ஓடிவிடு! இல்லையேல்! உனக்குத் தீங்குண்டாகும் என்று கடிந்து கூறினன். இவ்வாசகத்தைக் கேட்ட இடும்பை, வீமனுடைய அடிகளில் வீழ்ந்து வணங்கி, ஐயனே! தாங்கள் கூறியபடி யான் ஓர் அரக்கி ஆயினும், தங்களைக் கண்டவுடன் என் நெஞ்சம் ஏதோ ஓர் புத்துணர்ச்சியால் உடைந்துவிட்டது. தங்களது தெய்வத் திருமேனிக்கு, என் உள்ளத்தின் உணர்ச்சி பொருத்தமுடையதன்று எனினும் என்செய்வேன்! தங்களுடன் ஒன்றி வாழும் பாக்கியம் எனக்கு கிடைப்பது இயலாதெனினும், தங்களைப் பிரிந்து செல்லவும் இனி என்னல் இயலாதே! ஆதலால், எளியவளாகிய என்னை இகழாமல், தங்கள் அடிமைக்காரியாகவேனும் தங்களுடன் இருக்கும்படி திருவுள்ளம் இரங்க வேண்டும். அங்ஙனமின்றி, என்னைத் தாங்கள் கொன்ருலும், வேறெது செய்தாலும் நான் இவ்விடம் விட்டு அகலேன்! இது சத்தியம்! என்றுகூறி கண்ணீருகுத்து நின்ருள்.

இடும்பையின் அச்சந்தரும் உருவத்தைக் கண்ட வீமன், அவள்பால் வெறுப்புற்ருனெனினும், மெய்க்காதல் அளாவிய அவள் மென்மொழி கேட்டவுடன், நெஞ்சம் கனிந்தான். காதல் உணர்ச்சியால் அவன் உள்ளமும் மிகக் கனிந்தது. மெய்யுறு புணர்ச்சியை வெறுத்தான்; ஆனல் உள்ளப் புணர்ச்சியில் ஒன்றுபட்டான். முன்ன

வனே முன்னின்ருல் முடியாத தொன்றுண்டோ! அவளுடைய காதல் மொழியில் மயங்கி, அவளை அவ்விடம் விட்டு அகலப்போ, எனவும் அவன் நெஞ்சம் இடந்தந்திலது. இடும்பையின் உருவத்தை நோக்குங்கால், தன் உள்ள நெகிழ்ச்சிக்குத் தானே நாணுவான். இவ்வாறு, அவளை "அகன்று போ" என்று கூறவும் இயலாதவனாய், "நில்" என்று கூறுந் துணிவும் இல்லாதவனாய் வீமன் திகைத் திருந்தான்.

இச்சமயத்தில், இடும்பன் மானிடநாற்றத்தை மூக்கறிவால் அறிந்து, வாய்த்தது நமக்கு இன்று மானிட ஊன்! என்று மகிழ்ந்து, நாற்றம் வரும் திசை நோக்கி விரைந்து ஓடிவந்தான். அவன் வருகையால் கலக்கமடைந்த இடும்பை, அஞ்சி ஒரு புறம் ஒதுங்கி நின்ருள். ஓடிவந்த இடும்பன், சினங் கொண்டு வீமன் பிடரில் ஓங்கிக் குத்தினன். வீமன் அந்தக்குத்தைச் சாதுரியமாகத் தடுத்துக்கொண்டு சீறி எழுந்து போர் செய்யச் சித்தமானன். பின்னர் இருவருக்கும் கொடியபோர் நிகழலாயிற்று. அந்தப் போர் முழக்கத்தில் அயலில் நித்திரை செய்து கொண்டிருந்த யுதிட்டிரன் முதலிய ஐவரும் எழுந்து நிகழ்ந்தது இன்னதென்று அறியாமல் இது கனவோ! நனவோ! எனத் தேரமாட்டாமல் திகைத்து நின்றனர். அறநெறிச்செல்லும் ஆண்மை யோனகிய வீமனுடன் இடும்பன் ஒரு முகூர்த்தம்

கடும்போர் செய்தான். இறுதியில் வீமனால் கொலையுண்டு பிணமாகித் தரையில் புரண்டான்; அறத்தை வெல்லுமோ பாவம்!

தமையன் மாண்டதுகண்ட இடும்பை, வீமனுடைய ஆற்றலை வியந்தாள். யுதிட்டிரன் முதலியோர் வீமனைக்கட்டித்தழுவி, அவ்விரவின் முற்பகுதியில் நிகழ்ந்தவற்றை வினவி அறிந்துகொண்டனர். பின்னர், இடும்பை அறத்தின் திருவுருவம் போல அயல் நின்ற குந்திதேவியார் மலரடிகளில் வீழ்ந்து வணங்கித் தன் வரலாற்றைக் கூறித் தான் வீமன்மேற் கொண்டுள்ள காதல் மிகுதியையும் குறிப்பாகக் கூறி தன்னை வீமன் அடிமையாக வேனும் ஏற்றருளும்படி செய்தல் வேண்டும் என இரந்து நின்றாள். இயல்பாகவே அருள் மிகுந்த கோபெருந் தேவியார், அரக்கியின் தூயகாதல் நிலைக்குப் பரிந்து, உருவம் பொருந்தா இத்திருமணம் எங்ஙனம் நிகழும்! என எண்ணி நின்றாள்.

வைகறை என்னும் மடந்தை, வெள்ளி என்னும் கை விளக்கேந்தி, உலகில் வந்தாள். அந்தச் சமயம் வெண்ணரைமுடியுடன் விளங்கிய துறவி ஒருவர், எங்கிருந்தோ பாண்டவர் முன் வந்து தோன்றினர். வருதலும், குந்திதேவியாரும், யுதிட்டிரனும், தம்பியரும் முகமலர்ந்து வருக! வருக! மாபெருந் துறவியே

வருக! வேதம் முறை செய்த வியாசரே! வருக என்று, எதிர்கொண்டழைத்து ஒருபக்கத்தில் தழைகளால் ஆதனமமைத்து, அதன்கண் வியாச முனிவரை அமர்த்தி வணங்கி ஒருசார் நின்றனர். வியாச முனிவர் அவர்களை நோக்கி, அன்புடையீர் உங்கள் அனைவர்க்கும் நன்மை உண்டாவதாக! உங்களுக்கு ஏற்பட்டுள்ள நிகழ்ச்சியை யான் முன்னரே எனக்குள்ள அவதிஞானத்தால் அறிந்துள்ளேன். இன்று இப்பெருமையுடைய திருப்பதியில், ஒரு திருமணம் நிகழ்தல் வேண்டும். ஐய! இதோ நிற்கும் அரக்கியின் பண்டை வரலாறு கூறுவேன் கேளுங்கள். இடும்பை என்னும் இந்த அரக்கி, பண்டைப் பிறவியில் வடநாட்டிலுள்ள ஒரு அரசன் மகளாக இருந்தாள். வீமனும் முன் பிறப்பில் ஒரு மன்னன் மைந்தனுகவே பிறந்திருந்தான். பண்டு இடும்பை "கமலகன்னி" என்று அழைக்கப் பட்டாள். "சித்திரபாகு" என்னும் பெயருடைய இவ்வீமனே, முற்பிறப்பில் அவள் காதலன் ஆயினன். இருவரும், சிவபெருமானிடத்துப் பேரன்பு கொண்ட சிவனடியார்களாக விளங்கினர். விகாரமான தோற்றமுடைய ஒரு சிவன் அடியார், ஒரு நாள் இவர்கள் வீட்டிற்கு உணவு வேண்டி வந்தனர். இளமையை உடைய கமலகன்னி, விகாரவுருவமான அத்துறவியைக் கண்ட உடனே, விழுந்து விழுந்து சிரித்தாள். அதனல் சினங்கொண்ட முனிவர், ஏடி! நீ! மறுபிறப்பில்

அழகற்ற அரக்கியாகக்கடவை! எனச்சபித்தார். அச்சாபத்தால், கமலகன்னி இப்பிறப்பில் இடும்பை யாயினள். இளமைகாரணமாகச் சிவனடியாரைப் பழித்தாளாயினும், சிவபிரானிடத்து முறுகிய அன்புடையவள் இவள். அந்தச் சிவபுண்ணியம் அரக்கியாகிய இவளை எத்தகைய பாவத்தையும் போக்கவல்ல இத்திருப்பதியிற் சேர்த்தது. மேலும், இங்குக் கோயில் கொண்டருளிய சற்குணநாத ருடைய திருவருளுக்கும் இவளைப்பாத்திரமாக்கியது. இவள், உருவத்தால் அரக்கியாக இருப்பினும், சீலத்தால் அருந்ததியையே ஒப்பாள்! இத்திருப்பதி யில் வசித்தமையால், பண்டைப் பிறவியிற் சிவ னடியாருக்குச் செய்த தீவினையும் கழிந்தது. ஓ தருமன் மகனே! பண்டு இவள் கணவனாகிய வீமனே, இன்றும் இவள் கணவனாகும் விதியுடை வன் ஆகின்றான். இவ்விருவருக்கும் திருமணம் நிகழவேண்டும், என்பது இத்தலத்தில் எழுந் தருளியிருக்கும் சற்குணேச்சுரருடைய திருவருட் குறிப்பும் ஆகும். அங்ஙனமாதலாலன்றோ உங் களைக் கொல்லச் சூழ்ச்சி செய்த துரியோதனன், கட்டிய அரக்குமாளிகையினின்றும் நெடுந் தொலை விலுள்ள இக்காட்டில் வந்து முடியும்படி சிற்பி சுரங்க மமைத்தான். இன்று நாட்காலை திருமணத் திற்கேற்ற நன்னாளாகவும் இருக்கின்றது. ஆதலால் இந்நந்நாளிலேயே திருமணமும் நிகழ்தல்வேண்டும்.

உங்கள் கருத்து யாது கூறுங்கள் என முனிபுங் கவன் உரைத்தருளினன்.

முனிவர் வாசகங்களைக் கேட்ட யுதிட்டிரன், வருந்தி, தவப்பெரியீர்! பண்டைப் பிறவியின் நிகழ்ச்சி யாதாயினும் ஆகுக! காதல் வாழ்விற்கு உருவப்பொருத்தம் இன்றியமையாததன்றோ! காம வேள்போலக் கட்டழகுடைய வீமசேனன், குரூரத் தோற்றமுடைய இவ் வரக்கியை மணத்தலும், இவளுடன் பொருந்தலும் தகுதியாகுமோ! எனலும், வியாசர் விளம்புவார்; கேளுங்கள் பாண்டவர்களே! சற்குணநாதப் பரம்பொருளின் திருவுள்ளக்குறிப்பு இஃதாயின், அவன் றிருவருள் உருவத்தையும் பொருந்தும்படி இயற்றவல்லதாம். இந்த வில்வ வனத்தில், நான்முகனல் ஆக்கப்பட்ட தீர்த்தம் ஒன்று இருக்கின்றது. சீத புட்கரிணி என்பது அதன் பெயராம். அதன் பெருமையை நீங்கள் இப்பொழுது கண்கூடாகக் காண்பீர்கள்; என்று கூறி இடும்பையை அழைத்து, அவள் செவியில் திருவைந்தெழுத்தோதி; நங்காய்! நீ சென்று உன்னல் வழிபாடு செய்யப்பட்ட சிவால யத்தின் அருகில், கீழ்த்திசையில் உள்ள திருக் குளத்தில் இம்மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு நீராடி, மீண்டும் இங்கு வருக! என்று பணித் தருளினர். இடும்பையும், வியாசர் உரைத்தபடியே பத்தியுடன் மந்திரம் நவின்று சீதபுட்கரிணியில்

மூழ்கி எழுந்தாள். கதிரவன் குணகடலிற் றோன்றி வானவெளியில் தன் ஒளியமிழ்தத்தை வீசிக் கலந்தான்; பறவைகள் பாடிக் களித்தன; தேவர்கள் துந்துபி முழக்கினர்; அரம்பையர் மலர்மாரி தூவினர்; ஆ! நீருள் மூழ்கி எழுந்த அரக்கி, திருமகளும் நிகரிலாப் பேரழகு படைத்துத் திகழ்ந்தாள். அழகுக்கும் ஓர் எல்லையுண்டோ! அழகின் பெருமையை உரைக்கச் சொற்களும் உண்டோ!

"இவள் அழகை,
எற்றே தமிழில் இசைத்திடுவேன் கண்ணிரண்டும்
ஆளை விழுங்கும் அதிசயத்தைக் கூறுவனே!
மீள விழியில் மிதந்த கவிதை எல்லாம்
சொல்லில் அகப்படுமோ! தூய சுடர்முத்தை ஒப்பாம்
மல்லிற் கனி யிதழிற் பாய்ந்த நிலவினையும்,
மேனி நலத்தினையும், வெட்டினையும் கட்டினையும்,
தேனில் இனியாள் திருத்த நிலையினையும்,
மற்றவர்க்குச் சொல்ல வசமாமோ! ஓர்வார்த்தை,
கற்றவர்க்குச் சொல்வேன்; கவிதைக் கனிபிழிந்த
சாற்றினிலே, பண், கூத்தெனும் இவற்றின்சாரம் எல்லாம்
ஏற்றியதனோடே இன்னமுதைத் தான்கலந்து
மாதவளின் மேனி வகுத்தான்" —பாரதியார்.

இங்ஙனம் இறைவன் அருளால் நல்லெழில்படைத்த இடும்பை மீண்டும் பாண்டவர் நின்ற இடத்தை அடைந்தாள். இவள் அழகில் மனம் முழுதும் பறிகொடுத்து வெறுங் கூண்டாகி நின்றான். வீம

சேனன்! ஏனையோர், இடும்பாவனத் திருப்பதியின் பெருமையை வியந்து இறைவனை வணங்கி நின்றனர்.

வியாச முனிவர், வீமனை அழைத்து ஐய! நீ சென்று பிரமதீர்த்தத்தில் நீராடி வருக! எனலும், இயல்பாகவே சிவபிரானிடத்து முறுகி வளர்ந்த அன்புடைய வீமன், அளவில்லா மகிழ்ச்சியுடையவனாய், இது ஆண்டவன் அருளே என எண்ணி, சீதபுட்கரிணியில் திருவைந்தெழுத்து ஓதி மூழ்கித் திருக்கோயில் வலம் வந்து, சிவாகமங் கூறியபடி சற்குணக் கடவுளை வணங்கி மீண்டான். நாட்காலையிலேயே மாமுது முனிவன் மறைவழிகாட்ட, வீமசேனன் இடும்பை என்னும் எழில்மிகு திருவை மணந்தான்; தேவர்கள் வாழ்த்தி மலர்மாரி சிந்தினர்.

திருமணம் நிகழ்ந்தபின்னர், வியாசர் பாண்டவர்களை நோக்கி, அன்புடையீர்! துரியோதனன் உங்களுக்குத் தீமை செய்தான்; அத் தீச்செயல் உங்களுக்கு நலத்தையே அளிப்பதாயிற்று. இடும்பைக்கு இங்ஙனம் திருவருள் செய்த இத் திருப்பதி இன்று தொடங்கி "இடும்பாவனம்" என்று, வழங்கப்படுக! இத் திருப்பதியில் வசிப்

போர்பழவினைகெட்டு, இம்மைமறுமைப் பயன்களை அடைவது திண்ணம், ஆதலால் நீங்கள் ஓராண்டு இத் திருப்பதியில் வசித்து அருளுக்குப் பாத்திர ராவீர்; வாழ்க! என வாழ்த்தி வான்வழியாக முனிவர் சென்றார். முனிவர் கூறியபடியே பாண்டவர்கள் ஓராண்டு இத்திருப்பதியில் வசித்துச் சற்குணக் கடவுளை வணங்கிப் பெருமையடைந்தனர்; என்பது.

## தேவாரச் சான்றுகள்.

மேலே கூறிய பிருமாண்ட புராணத்தாலும், இதிகாசத்தாலும், இத் திருவிடும்பாவனம் மிகப் பழையகாலத்தே தோன்றியதென்பதும், அளவில்லாத மகிமையுடையது என்பதும் உணர்த்தப் பட்டன. இந்த இரண்டு நூல்களிலும், இத் திருப்பதி, அடர்ந்த காடாகவே காட்சிதருகின்றது. இனி, இத்திருப்பதியைப்பற்றிய செய்திகள் தேவாரத்தால் அறியப்படும். தேவார காலம் ஏழாம் நூற்றாண்டின் தொடக்கம் என்பர் சரித்திர நூலாசிரியர். தேவாரம் பாடிய ஆசிரியருள், காலத்தால் முந்தியவர் திருநாவுக்கரசர் ஆவர். அப் பெரியார் பாடிய க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகத்தில் இத்திருப்பதியைப் பாடியுள்ளார் அது:—

"கொடுங்கோளூர் அஞ்சைக்களம் செங்குன்றூர்
கொங்கணம் குன்றியூர் குரக்குக்காவும்
நெடுங்களம் நன்னிலம் நெல்லிக்காவும்
நின்றியூர் நீடூர் நியமம்நல்லூர்
இடும்பாவனம் எழுமூர் ஏழூர் தோழூர்
எறும்பியூர் ஏராரும் ஏம கூடம்
கடம்பை இளங்கோயில் தன்னிலுள்ளும்
கயிலாய நாதனையே காணலாமே".

என்பதாம்.

சிவாநுபூதிச் செல்வர் திருநாவுக்கரசர் காலத்திற்கு முன்னரும், இத்திருப்பதி இருந்ததென்பதும், அப் பெரியாருடைய தெய்வத் திருவாக்கால் போற்றப்பட்டதென்பதும், இத்திருத்தாண்டகத்தால் அறியலாம். இனி இப்பெரியார் முதியவராய்த் திகழ்ந்தகாலத்தே அவதாரம் செய்தருளிய திருஞானசம்பந்த நாயனருடைய திருவாக்கால், யாம் இத்திருப்பதியின் வரலாறும், பெருமையும் நன்கு அறிந்துகொள்ளலாம். அப்பெரியார் பாடியருளிய திருப்பதிக்கோவையில்

"மேலாகும் விளமர்கர வீரம்பெரு வேளூர்
மிளிர்தலை ஆலங்காடு குடவாயில் சேறை
காலூர்ம யானங்கடு வாய்க்கரைப் புத்தூர்
கவிலும் இரும்பூளை திரு வாதைப் பெரும்பாழி

மாலூரும் அவளிவணல்லூர் பரிதி நியமம்
வாழ்வெண்ணி பூவனூர் பாதாளீச் சாரீச்
சேலூருந் திருக்களர்சிற் றேமம் உசாத்தானம்
திருவிடும்பா வனத்தோடு சேர்ந்த கடிக்குளமே"

என இத்திருப்பதி பாடப்பட்டுளது. இனி அவர் பாடிய திருவிடும்பாவனத் திருப்பண் வருமாறு:—

பண் – நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

"மனமார்தரு மடவாரொடு மகிழ்மைந்தர்கள் மலர்தூய்த்
தனமார்தரு சங்கக்கடல் வங்கத்திர ளுந்திச்
சினமார்தரு திறல்வாளெயிற் றரக்கன் மிகுகுன்றில்
இனமாதவர் இறைவர்க்கிடம் இடும்பாவனம் இதுவே. 1

மலையார்தரு மடவாளொரு பாகம்மகிழ் வெய்தி
நிலையார்தரு நிமலன்வலி நிலவும்புக ழொளிசேர்
கலையார்தரு புலவோரவர் காவல்மிகு குன்றில்
இலையார்தரு பொழில்சூழ்தரும் இடும்பாவனம் இதுவே. 2

சீலம்மிகு சித்தத்தவர் சிந்தித்தெழும் எந்தை
ஞாலம்மிகு கடல்சூழ்தரு முலகத்தவர் நலமார்
கோலம்மிகு மலர்மென்முலை மடவார்மிகு குன்றில்
ஏலங்கமழ் பொழில்சூழ்தரும் இடும்பாவனம் இதுவே. 3

பொழிலார்தரு குலைவாழைக ளெழிலார்திகழ் போழ்தில்
தொழிலான்மிகு தொண்டரவர் தொழுதாடிய முன்றில்
குழலார்தரு மலர்மென்முலை மடவார்மிகு குன்றில்
எழிலார்தரு மிறைவர்க்கிடம் இடும்பாவனம் இதுவே. 4

பந்தார்விர லுமையாளொரு பங்காகங்கை முடிமேல்
செந்தாமரை மலர்மல்கிய செழுநீர்வயற் கரைமேல்
கொந்தார்மலர் புன்னைமகிழ் குரவங்கமழ் குன்றில்
எந்தாய்என இருந்தானிடம் இடும்பாவனம் இதுவே. 5

நெறிநீர்மையர் நீள்வானவர் நினையும்நினை வாகி
அறிநீர்மையி லெய்தும்மவர்க் கறியும்அறி வருளிக்
குறிநீர்மையர் குணமார்தரு மணமார்தரு குன்றில்
எறிநீர்வயல் புடைசூழ்தரும் இடும்பாவனம் இதுவே. 6

நீறேறிய திருமேனியர் நிலவும்முல கெல்லாம்
பாறேறிய படுவெண்டலை கையிற்பலி கொள்ளா
கூறேறிய மடவாளொடு பாகம்மகிழ் வெய்தி
ஏறேறிய இறைவர்க்கிடம் இடும்பாவனம் இதுவே. 7

தேரார்தரு திகழ்வாளெயிற் றரக்கன் சிவன்மலையை
ஓராதெடுத் தார்த்தான்முடி யொருபஃதவை நெரித்துக்
கூரார்தரு கொலைவாளொடு குணநாமமும் கொடுத்த
ஏரார்தரும் இறைவர்க்கிடம் இடும்பாவனம் இதுவே. 8

பொருளார்தரு மறையோர்புகழ் விருத்தர்பொலி மலிசீர்த்
தெருளார்தரு சிந்தையொடு சந்தம்மலர் பலதூய்
மருளார்தரு மாயன்னயன் காணார்மய லெய்த
இருளார்தரு கண்டர்க்கிடம் இடும்பாவனம் இதுவே. 9

தடுக்கையுட னிடுக்கித்தலை பறித்துச்சமண் நடப்பார்
உடுக்கைபல துவர்க்கூறைகள் உடம்பிட்டுழல் வாரும்
மடுக்கண்மலர் வயல்சேர்செந்நெல் மலிநீர்மலர்க் கரைமேல்
இடுக்கண்பல களைவானிடம் இடும்பாவனம் இதுவே. 10

கொடியார்நெடு மாடக்குன்ற ளூரிற்கரைக் கோல
இடியார்கட லடிவீழ்தரு மிடும்பாவனத் திறையை
அடியாயு மந்தணர்காழி யுளணிஞானசம் பந்தன்
படியாற்சொன்ன பாடல்சொலப் பறையும்வினை தானே.” 11

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தப் பெருமானார் தேவாரப் பாடல்களிற் சிறந்த கலைநலங் கவினிய பண்களில், இதுவும் ஒன்றாகும். இத்திருப்பண்ணிலிருந்து இத்திருப்பதி வரலாறு பல அறியலாம். அவற்றை ஆராய்வோம்.

பிருமாண்டபுராண காலத்திலும், மகாபாரதம் நிகழ்ந்த காலத்திலும் இத்திருப்பதி மாபெருங் காடாகவே இருந்தது. தேவாரகாலத்தில், ஞான போனகர் பண்ணால் இத்திருப்பதி பொற்றொடி

மகளிரும் மைந்தரும் செறிந்து நெற்பொலி நெடு நகராய்த் திகழ்வதைக் காணலாம். செந்தமிழ் நாட்டைக் காடுகெடுத்து நாடாக்கிக் குளந்தொட்டு வளம்படுத்திச் சீர்திருத்தியவர் காவிரிப்பூம் பட்டினத்தைத் தலைநகராகக்கொண்டு செங்கோல் செலுத்திய கரிகாற் பெருவளத்தான் முதலிய சோழமன்னர்களாவார். காவிரியாற்றுக்கு இரு மருங்குங் கரைகண்டவன் கரிகாற்சோழன் ஆவான், இக்காரணங்களால் அவன் திருமாவளவன்என்று அழைக்கப்பட்டான்;

> "ஏரியும் ஏற்றத்தினானும் பிற நாட்டு
> வாரிசுரக்கும் வளன் எல்லாம் — தேரின்
> அரிதாளின் கீழுகூஉம் அந்நெல்லே சாலும்
> கரிகாலன் காவிரி சூழ் நாடு"

என்னும், இப் பழம்பாடலும் காவிரி நாட்டைச் சீர்திருத்தியவர் பூம்புகார்ச் சோழர் என்பதற்குச் சான்றாகும். ஆகவே அந்தச் சோழமன்னர் காலத்திலேதான் இடும்பாவனம் என்னும் இக் காடு நாடாகியது என்று எண்ணுதல் வேண்டும். கரிகாற் பெருவளத்தான் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தவன் ஆவான். ஆதலின் அக்காலந்தொடங்கிச் சீர்திருத்தமுற்ற இத் திருப்பதி, ஞானசம்பந்தர் காலத்திற் சிறந்த மூதூராய் விளங்கியது.

இனி, ஞானசம்பந்தர் இத் திருப்பதிக்குவந்த போது அவர்கண்ட காட்சியே பண்ணாக உருக் கொண்டதாகலின், அக் காட்சிகளைக் கொண்டு, இடும்பாவனம் அக் காலம் இருந்த பெருமையைக் காணக்கூடும். மனத்தால் இரண்டறக்கலந்த காதலர்கள் இத் திருப்பதியில் இறைவனை மலரால் அலங்கரித்து வணங்கி நிற்கின்றனர்; கலை நலம் மலிந்த புலவர் பெருமக்கள் இத் திருப்பதியில் இறைவன் புகழ்பாடி ஏத்துகின்றனர்; சைவசமயங் கூறிய ஒழுக்கந்தவறாத சான்றோர் பலர் குழுமி நிற்கின்றனர்; சரியை முதலிய சைவாகமம் ஓதிய நான்கு பாதத்தும், நின்று ஒழுகும் சிவனடியார் இறைவன் திருக்கோயில்வாயிலில் நின்று, ஆடிப் பாடி அன்பினால் மூர்ச்சித்து நிற்கின்றனர்; மா மறை முதல்வரும், ஞானச்செல்வரும்கூடி நிற்கின் றனர்; இவற்றை முறையே கீழ்க்காணும் ஞானசம் பந்தர் வாசகம் விளக்கும்.

"மனமார்தரு மடவாரொடு மகிழ் மைந்தர்கள் மலர்தூஉய்"

எனவும்,

"கலையார்தரு புலவோரவர் காவன் மிகு குன்று"

எனவும்,

"பொருளார் தரு மறையோர் புகழ் விருத்தர் பொலிமலிசீர்த்
தெருளார் தரு சிந்தையொடு சந்தம்மலர் பலர்தூய்"

எனவும்,

"எழிலார் திகழ்போழ்தில் தொழிலான் மிகு
தொண்டர் அவர் தொழுதாடியமுன்றில்"

எனவும், திகழும் அடிகளை நோக்குக.

ஞானசம்பந்தர் இத் திருப்பதிக்குவந்த காலத்தில் இது கடலருகே இருந்ததென்று தெரிகிறது. "தனமார்தரு சங்கக் கடல் ஓசை, அவர் திருச்செவியில் புகுந்தது, மரக்கலங்கள் அக்கடலிற் செல்வதை அவர் கண்டார், அதனாலன்றோ" "தனமார்தரு சங்கக்கடல் வங்கத்திரள் உந்தி" என்னும் திருவாக்குகள் பிறந்தன. மாறும் இயல்புடைய இப் பூமி, இப்பொழுது காணப்படுவதுபோல் அந்தக் காலத்தில் இருந்ததில்லை. இடும்பாவனத்தின் தென் பகுதியில் இப்பொழுது காணப்படுகின்ற நிலப் பரப்பும் தொண்டியக்காடு, முனங்காடு என்ற ஊர்களும், அந்தக்காலத்தில் இருந்ததில்லை. அவைகள் இருக்கும் இடமெல்லாம் கடலாகவே இருந்தது. "இடியார்தரு கடல் வீழ்தரும் இடும்பாவனம்" என்ற அடிகள், கடலலைகள் இத் திருப்பதியின் தென்பகுதியில் மோதியதைக் காட்டுகின்றது.

நாளடைவில் கடல் மனிதர்க்கு வாழ ஊர்களைச் சிருட்டித்துக் கொடுத்தபடியே தென்றிசையில் அடங்கிச் செல்கின்றதென்று அறிதல் வேண்டும். இங்ஙனமே, இத்திருப்பதியின் தென்கிழக்கில் உள்ள வாய்மேடு, அன்னப்பேட்டை முதலிய ஊர்கள் உள்ள நிலமும் பண்டைக்காலத்தில் கடலாகவே இருந்ததென அறிதல்வேண்டும். கரிகாலன் காலத்தில் துறைமுகப்பட்டினமாக விளங்கிய கரிகாற் பட்டினம் இக்காலத்தில் கடற்கரையினின்றும் பத்துக்கற்றொலைவில் இருத்தலை அறிக. துளசா பட்டினம் ஒருகாலத்தில் துறைமுகமாகவே இருந்தது. ஞானசம்பந்தர் காலத்தே திருமறைக்காட்டினின்றும் ஒரு இராசபாட்டை கரியாபட்டினம், குன்றளூர், (குன்னலூர்) திருக்கடிக்குளம், திருவிடும்பாவனம் முதலிய ஊர்களின் வழியாகப் பாண்டி நாட்டிற்குச் சென்றது. ஞானசம்பந்தர் இவ்வழியாகவே திருமறைக்காட்டினின்றும் திருவிடும்பாவனத்திற்கு வந்தனர். குன்னலூர் அக்காலத்தில் சிறந்த ஊராகத் திகழ்ந்தது. இவற்றை,

> "கொடியார் நெடுமாடக் குன்றளூரிற் கரைக்கோல
> இடியார்தரு கடல் வீழ்தரும் இடும்பாவனம்"

என்ற திருவாக்கால் உணரலாம்.

பிள்ளைப்பெருமான் திருவாக்கால் இத் திருவிடும்பாவனம் என்ற மூதூர், அந்தக்காலத்தில்

தோன்றிய செல்வக்காட்சி நன்கு அறியப்படும். அப் பெருமைதங்கிய வாசகங்களாவன:—

"ஏலங்கமழ் பொழில்சூழ் தரும் இடும்பாவனம்"

"இலையார்தரு பொழில்சூழ் தரும் இடும்பாவனம்"

"பொழிலார்தரு குலைவாழைகள் எழிலார்தரு இடும்பாவனம்"

"செந்தாமரை மலர்மல்கிய செழுநீர்வயற் கரைமேல்
கொந்தார்மலர் புன்னைமகிழ் குரவங்கமழ் இடும்பாவனம்"

"எறிநீர்வயல் புடைசூழ் தரும் இடும்பாவனம்"

"மடுக்கண் மலர் வயல்சேர் செந்நெல் மலிநீர்க்கரை
மேல்......... இடும்பாவனம்"

என்று நிகழும் இவ்வடிகளை மனக்கண்ணால் காண வல்லார், அந்தக்காலத்தில் இத் திருப்பதி திகழ்ந்த பெருமையை நேரிற் கண்டவரேபோல்வார்!

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசரொடு திருமறைக்காட்டில் வந்து மறைக்கதவம் திறக்கவும், காப்பிட்டுக்கொள்ளவும் பாடி, அற்புதம்பல செய்து அமர்ந்திருந்தனர். அப்பொழுது, செந்தமிழ்ப் பாண்டிநாட்டில் அரசன் முதலிய அனைவரும், தீய சமணருடைய உபதேசத்தில் மயங்கி சைவநெறி விடுத்துப் பொய்யாய சமணமதத்தைத் தழுவலா

யினர். ஆதலால், பாண்டிநாடு முழுதும் சமணிருள் படர்ந்து, சைவ ஒளி மறையலாயிற்று. அந்தக் காலத்தில் அரசனுயிருந்த பாண்டியனுடைய மனைவியார் மங்கையர்க்கரசி நாயனர் ஆவர். மந்திரியார் குலச்சிறை நாயனர்; இப் பெரியோரிருவரும், பாண்டியநாட்டின் நிலைமைக்கு வருந்தி, படர்ந்த சமணிருள் போக்கிச் சைவ ஒளியை அந்நாட்டில் மீண்டுங்கொணரச் சமயம் பார்த்திருந்தனர். இப் பெரியோர்கள் திருமறைக்காட்டில் ஞானசம்பந்தர் இருத்தலை ஒற்றர் வாயிலாய் அறிந்து, தகுந்த மனிதரை ஏவி அப்பெருமானைத் தம் பாண்டி நாட்டிற்குச் சிவிகையில் அழைத்துவரச்செய்தனர். அங்ஙனமே பாண்டிய நாட்டிற்குச் சிவிகையில் பிள்ளைப்பெருமானை அழைத்துச்செல்லும் பொழுது தான் வழியிலுள்ள சிவதலங்களை ஞானசம்பந்தர் பாடிப் பரவிச் செல்வாராயினர். செல்லுங்கால் இத்திருப்பதிக்கு வடதிசையிலுள்ள குன்னஊரை அடைந்து திருக்கடிக்குளம் திருவிடும்பாவனம் என்னும் இரண்டு தலங்களுக்கும் வர நினைந்த உடனே, ஞானசம்பந்தர் திருக்கண்களுக்கு இத் திருப்பதியிலுள்ள மணல்கள் எல்லாம், சிவலிங்க வடிவமாகக் காணப்பட்டனவாம்! அதனுல் சிவிகை மேல் செல்ல அஞ்சியும் கால்களால் அம்மணலிங்கங்களை மிதிக்க மனம் பொருமலும், கால்களை உயரத்தூக்கித் தலைகீழாய்க் கைகளாலேயேநடந்து

இத்திருப்பதியை அடைந்தார்; என்று ஓர் கர்ண பரம்பரைக் கதை வழங்கி வருகின்றது. இதற்குச் சான்றாக, ஒரு தமிழ்ச்செய்யுளும் வழங்குகின்றது. அச்செய்யுள் திருத்தவியலாதபடி பிழைமலிந்துளது. அதனை எனக்குக்கிடைத்தவாறே கீழே தருகிறேன்.

"சொல்லார் மலர்ச் சோலைதரு துய்யே தமதாகும்
புல்லேயினு நல்லார் வளம் புகழ்மீன காமதேனு
கல்லாய் நவமணியாய் மனு கடுகுக்கினை மணல்கள்
எல்லாம் சிவனுருவாகிய இடும்பாவனம் இதுவே".

என்பதாம்.

இங்ஙனம் கைகளால் நடந்துவந்த ஞானசம்பந்தர்,

"கண்ணார்ந்த திருநுதலார் மகிழ்ந்த கடிக்குள மிறைஞ்சி
எண்ணார்ந்த திரு விடும்பாவன மேத்தி எழுந்தருளி
மண்ணார்ந்த பதிபலவும் மகிழ்தரும் அன்பால் வணங்கி
பண்ணார்ந்த தமிழ்பாடிப் பரவியே செல்கின்றார்".

எனச் சேக்கிழார் இனிதிற் கூறுவர். பிற்காலத்தில் திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகள் தமது விண்ணப்பக்கலிவெண்பாவில்

" * பெர்ங்குபவ
வல்லவிடும் பாவனத்த மட்டொளி செய்கின்ற திரு
மல்லவிடும் பாவனத்து மாட்சிமையே ".

என்று பாடித் துதித்துள்ளார்.

## தேவார காலத்தின் பின்னர்.

தேவாரகாலத்தின் பின்னர், இத்திருக்கோயில் வரலாறு நன்கு தெரியவில்லை. தெரியவில்லை எனினும் சைவந் தழைத்தோங்கிய காலம் தேவார காலத்திற்குப் பிற்காலம். ஆதலின், தமிழ் மக்கள் இத்திருப்பதியை நன்கு போற்றி வந்திருத்தல் வேண்டும். கன்னபரம்பரையாக வழங்கும் செய்திகளும் சில வுள; அவற்றைக் கீழே தருகின்றோம்.

## கன்னபரம்பரைச் செய்திகள்.

தஞ்சையைத் தலைநகராகக்கொண்டுசெங்கோல் செலுத்திய மகாராஷ்டிர மன்னர்கள், இத்திருக் கோயில் நித்திய நைமித்திக காரியங்கள் நன்றாக நடைபெறவேண்டி, சர்வமானியங்கள் அளித்தனர். திருக்கோயிலின் பக்கத்தில் தென்றிசையிலுள்ள குறுங்காடு (இப்பொழுது தென்னந்தோப்பு) திரு

அமுது செய்யவேண்டிய விறகின்பொருட்டு இறையிலியாகவிடப்பட்டது. அன்னப்பேட்டை என்னும் கிராமம், திருக்கோயிலின் நித்தியச் செலவிற்காக இறையிலியாக விடப்பட்டது. மகாராட்டிர மன்னர்களே அன்றிப் பெருநிலக்கிழவர்களும் செல்வர்களும் இத்திருக்கோயிலுக்கு வேண்டிய நிலம் பொருள் முதலியன கொடையாக வழங்கினர். பெருநிலக்கிழவர்களால் வழங்கப்பட்ட நிலத்தை மன்னர்கள் இறையிலியாக்கினர். விளாங்காடு என்னும் கிராமம் அமுதுபடிக்காக இறையிலியாக விடப்பட்டது. மதுக்கூர் சமீன்தார் ஒருவரால், அடைஞ்சாவளாகமும், வாடிக்காடும் பிரதோஷக் கட்டளையாக விடப்பட்டு, மன்னர்களால் இறையிலியாக்கப்பட்டன. வெள்ளிக்கிடங்கு என்னும் கிராமத்தில் உள்ள நிலம், தானிக்கோட்டகம் சாமிநாத செட்டியார் என்பவரால் கொடுக்கப்பட்டு, இறைவீடுசெய்யப்பட்டது. இந்த நிலம் திருவாதிரைக் கட்டளையாம். குடைமானியம் என்னும் இடும்பாவனத்திலுள்ள நிலப்பகுதி, இறைவனுக்கு குடைபிடிப்பவனுக்கு மானியமாக ஒரு செல்வரால் வழங்கப்பட்டது. பசுக்காரன் மானியம் என்பதும் அங்ஙனமே, கோயிற் பசுக்களை மேய்ப்பவனுக்கு மானியமாக ஒரு அன்பரால் அளிக்கப்பட்டது. இவ்வாறே, பண்டைக்காலத்துத் தமிழ்மக்கள் இத்திருப்பதிக்கு வேண்டிய நிலம் முதலியவற்றை

வழங்கிப் போற்றி வந்தனர் என்று அறிதல் வேண்டும்.

இனி, இத்திருக்கோயிலின் சிறப்புவிழாவாகிய பிரமோத்ஸவம், ஆண்டுதோறும் வைகாசித் திங்களில் நிகழ்வதாம். வைகாசிப் பருவநாளில் தேர்விழா நிகழும். பத்துத் தினங்கள் சிறப்புடன் நடந்தேறும் இத்திருவிழாவை, இந்த இடும்பா வனத்தைச் சூழ்ந்துள்ள கிராமத்தார்கள் முறைப் படுத்தி நடத்தி வந்தனர். அந்த முறைப்படியே விழாநாட்களில் பிரசாதம் வழங்கப்படும். அந்த வழக்கம் இன்றும் நிகழ்கின்றது. அது வருமாறு:—

பிரமோத்ஸவத்தின் முதல்நாள் விழா இடும்ப வனம் இராமதேவர் பொதியதேவர் மரபினரும்.

| | | |
|---|---|---|
| 2-ம் | திருவிழா | மேலப்பெருமழைக் கிராமத்தாரும் |
| 3-ம் | ,, | கீழப்பெருமழைக் ,, |
| 4-ம் | ,, | தொண்டியக்காடு ,, |
| 5-ம் | ,, | கற்பகநாதர்குளம் ,, |
| 6-ம் | ,, | மங்களநாயகிபுரம் ,, |
| 7-ம் | ,, | இடும்பவனம் மானங்காத்த தேவர் மரபினர் |
| 8-ம் | ,, | வாய்மேடு, தென்னடார் மரபினர் |
| 9-ம் | ,, | பொது |
| 10-ம் | ,, | தருமகருத்தர் |

என அறிக.

மகாராட்டிர மன்னர் ஆட்சிக்காலத்தில் இத் திருவிடும்பாவனம், மேலப்பெருமழை முதலிய பல கிராமங்களுக்குத் தலைமைத்தானமாக அரசியல் விவகாரங்களிலும் கொள்ளப்பட்டது. ஆதலின், அக்காலத்தில் சாஸனம் கடன்பத்திரம் முதலியன எழுதுவோர், "இடும்பாவனம் மாகாணத்தைச் சேர்ந்த இன்ன ஊரிலுள்ள இன்னவர்" என்று எழுதும் வழக்கம் இருந்ததாகத் தெரிகிறது.

## திருக்கோயிற் றிருப்பணி.

திருவிடும்பாவனம் திருக்கோயில் எந்தக்காலத்தில் யாரால் கட்டப்பட்டதென்பது தெரியவில்லை. 1906-ஆம் ஆண்டிற்கு முன்னர் உள்ள திருக்கோயில் பண்டைக்காலத்துச் செங்கல் திருப்பணியாகும். செங்கற் றிருப்பணி செய்தவர் சோழ மன்னர் ஆதல் வேண்டும். சோழர் காலத்தில் எடுக்கப்பட்ட பழங்கோயில் அது என்பதற்கு அதன் மண் மதில் முதலியன சான்று பகர்ந்தன. மிகப் பழையதாகிக்கிடந்த திருக்கோயிலை 1906-ம் ஆண்டில் தருமகருத்தராய்த் திகழ்ந்த குன்னியூர் பிர்மஸ்ரீ இராமையர் அவர்கள் நன்முயற்சியால் திருப்பணிவேலை தொடங்கி ஐந்து ஆண்டில் கருங்கற்றிருப்பணி செய்து மகா கும்பாபிஷேகமும்

செய்யப்பட்டது. அதன்பின்னர் தேவஸ்தானம் போர்டு நிர்வாகத்தில் நிர்வாக அதிகாரியாய் இப்பொழுது பணியாற்றிவருபவரின் நன்முயற்சியால். முன் திருப்பணிவேலையில் விடப்பட்டிருந்த இராச கோபுரம் முதலிய கோபுரங்களை திறமையுடைய சிற்பநூல் வல்லோரால், அவற்றின் பழைய பண்பு கெடாமல், பழைய சிற்பங்களை இருந்தவாறே புதுக்கியும், உறுப்புக்கள் உடைந்தும், சிதர்ந்தும் போனவற்றைத் திருத்தியும், அழகுறத் திருப்பணி வேலை நடைபெற்றுவருகிறது.

ஷை கோயிலுக்குச் சொத்து பல கிராமங்களிலுமுள்ளன.

| | | ஏ. | செ. |
|---|---|---|---|
| 1 | இடும்பாவனம் | 691 | 12 |
| 2 | விளாங்காடு | 929 | 74 |
| 3 | அன்னப்பேட்டை | 293 | 65 |
| 4 | மங்களநாயகிபுரம் | 143 | 80 |
| 5 | நந்திமாங்குடி | 62 | 75 |
| 6 | மற்ற கிராமங்கள் | 38 | 0 |
| | ஆக | 2159 | 6 |

தென்னைமரங்களில் சுமார் 30000 மரங்கள் உள்ளன.

## தருமகருத்தர்கள்

இத்திருப்பதியின் பூசை முதலிய நிகழ்ச்சிகளை, இடும்பவனம் மாகாணத்தைச் சேர்ந்த கிராமங்களில், அவ்வக்காலத்தில் சீரும் செல்வாக்கும் வாய்ந்த செல்வர்களே தருமகருத்தர்களாக இருந்து நடத்திவந்தனர், என்று அறிகின்றோம். இப்பொழுது, இத்திருக்கோயிலுக்கு இருக்கும் செல்வ நிலைபோல், பண்டைக்காலத்தில் போதிய வருவா யுடைய நிலம் முதலியன இருந்ததில்லை. ஆதலால், தருமகருத்தர்களாய் அந்தக்காலத்தில் இருந்தவர் கள், நன்கொடையாகக்கிடைக்கும் பொருள்களுக்கு மேற் செலவாகும் பொருள்களைத் தாமே செலவு செய்துவந்த உண்மை அறவோராதல் வேண்டும். அப்பெரியோர்கள் இன்னார் என, அவர்கள் ஊர், பெயர் முதலியன தெரிந்ததில்லை. 19-ஆம் நூற் ருண்டின் பிற்பகுதியில், வாய்மேடு அருணாசலதேவர் என்பவர் இத்திருக்கோயில் தருமகருத்தராய்த் திகழ்ந்தாரென்று அறிகின்றோம். அவருக்குமுன் சில தலைமுறை அவருடைய முன்னோர்கள் தரும கருத்தர்களாக இருந்தனராம். அருணாசல தேவ ருக்குப் பின்னர், குன்னியூர் பிர்மஸ்ரீ. இராமைய அவர்களும், அவருக்குப்பின் சாம்பசிவ ஐயரவர் களும் அவருக்குப்பின் முறையே அவர்வழித் தோன்றல்களாகிய துரைசாமி ஐயரவர்களும், சி சுப்பிரமணிய ஐயரவர்களும், சாம்பசிவ ஐயரவ

களும் ஒருவர்பின் ஒருவராய்த் தருமகருத்தர்களாக இருந்து வந்திருக்கின்றனர். இவர்கள் திருக்கோயிற் காரியங்களை ஊக்கத்துடன் கவனித்தனர். வருவா யில்லாமற்கிடந்த கோயில் நிலங்களைத் திருத்திப் போதிய வருவாயுடையதாகச் செய்த பெருமை இங்குக்கூறிய நா. சாம்பசிவ ஐயரவர்கள் மரபின ரையே.சார்ந்ததாம்.

## வில்வவன மான்மியம்.

இனி, இத்திருவிடும்பாவனத்தின் பெருமையை பிருமாண்டபுராணத்தில் நூறும் அத்தியாயத்தின் மேலுள்ள ஆறு அத்தியாயங்கள், பாரித்து உரைக் கின்றன. சனகாதி முனிவர்களுக்கு புராணங் கூறு வதில் வல்லவரும்; வியாசமுனிவருடைய மாணாக் கரும் ஆகிய சூதர் என்னும் துறவி கூறுவதாக வுள்ளது, அப்புராணம். அப்புராணத்தால் இத் திருப்பதியை வழிபட்டுச் சிறப்படைந்த இயமன் முதலியோர் சரிதங்களும், இத்திருப்பதியில் செய்யத் தகுந்த அறங்களும், அவற்றைச் செய்யும் முறையும் செய்வதற்குரியகாலமும், அங்ஙனம் செய்யப்பட்ட அறங்களால் விளையும் அளவிடப்படா பயனும், பிறவும் நன்கு விரித்துக் கூறப்பட்டுள்ளன. அவற்றை இனி அச்சூதமுனிவரே சொல்லக் கேட் போம்.

## பூமகளுக்கு இரங்கி மறலியைப்படைத்தது

சனகர் முதலிய துறவிகள் வசிக்கும் தவப் பொழிலுக்கு ஒருகாலத்தில் நான்கு வேதங்களையும் ஓதியுணர்ந்த சூதமுனிவர் எழுந்தருளினர். அவர் வருகையால் பெரிதும் மகிழ்ச்சியடைந்த சனகர் முதலியோர், எதிர்கொண்டழைத்து வணங்கி உபசரித்தனர். தங்கள் தவப்பொழிலில் சில நாள் இருந்து, வேதம் புராணம் முதலிய வற்றில் தங்களுக்கு ஏற்பட்டுள்ள சந்தேகங்களை தீர்த்தருள வேண்டும், என்று வேண்டினர். அங்ஙனமே சூத முனிவரும் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கினர். சூதர், சனகர் முதலியோருக்கு வேதநுட்பங்களை யும், புராணங்களையும் விளக்கி வருங்கால், பிருமாண்டபுராணத்தில் கூறப்பட்டுள்ள வில்வ வன மான்மியத்தை அறிந்து கொள்ள ஆவலுடைய சனகர் பின் வருமாறு வேண்டினர்.

பொறிபுலன் அடங்கத்தவம் செய்துயர்ந்த பெரியீர்! பிருமாண்ட புராணத்திற் கூறப்பட்ட வில்வவன மான்மியம் கேட்டோருடைய பிறவிப் பிணியை அகற்றி, வீடுபேறு அளிக்கும் பெருமை யுடையது என்று, சான்றோர்கூறக்கேட்டுள்ளேன்.

அந்தப்புராணத்தை நன்ருக அறிந்தவரை இது வரையில்யான்கண்டதில்லை. யாங்கள் முன் செய்த தவப்பயனுல் புராணங் கூறுவதில் மிக வல்லவரான அடிகளார் இங்கு வரப்பெற்ருேம். அடியேங் களிடத்துத் தயைகூர்ந்து, வில்வவன மான்மியத் தை எங்களுக்குச் சொல்லியருள வேண்டும், என்றனர்.

சூதமுனிவர் மகிழ்ந்து கூறலானுர்:— அன்பர் களே! உங்கள் விருப்பம் மிகவும் நல்லதே! வில்வ வன புராணத்தை கேட்பவர்களே அன்றிச் சொல்பவரும் சிறந்த சிவபுண்ணியப் பேறடை கின்றனர்! என என் ஆசிரியரான வியாசமுனிவர் கூறக் கேட்டுள்ளேன். நன்மாணுக்கராகிய உங் களுக்குச் சொல்வதனுல் நானும் சிறந்தவனுவேன்.

கேளுங்கள் இருடிகளே! சுதீச்சுரம் என்னும் சிவதலத்திற்குத் தென்மேற்குத் திசையிலும், தென் கடலுக்கு வடபகுதியிலும் வில்வவனம் என்னும் திருப்பதி இருக்கின்றது. அதனைத் திரு விடும்பாவனம், சற்குணேச்சுரபுரம், மங்களநாயகி புரம், மணக்கோலநகர் என்ற திருப்பெயர்களாலும் வழங்குவர். அத்திருப்பதியில் எழுந்தருளியிருக் கும் செஞ்சடைக்கடவுள், சற்குணநாதர் சற்குண நாதேச்சுரர், சற்குண நாயகேச்சுரர், சற்குணேச்சுரர் சற்குணநாயகர் மணக்கோலநாதர் இடும்பாவனேச்

சுரர் கல்யாணேச்சுரர் என்னும் திருநாமங்களாலும் அம்மையார் மங்களநாயகியம்மை, மங்களாம்பிகை, மங்களேசுவரி, கல்யாணேசுவரி என்னும் திருநாமங்களாலும் வழங்கப்படுகின்றனர். அத்திருப்பதிக்கண் உள்ள சிறந்த தீர்த்தம் சீதபுட்கரிணி, மோக்கபுட்கரிணி, பிரமதீர்த்தம், குசுமபுட்கரிணி, என்னும் திருநாமங்களையுடையதாம். இத்தீர்த்தமன்றி இயமதீர்த்தம், அகத்திய தீர்த்தம் முதலிய தீர்த்தங்களும் உள்ளன. இத்திருப்பதியின் தலவிருக்கம் வில்வம் ஆகும்.

வில்வவனத்தின் மகிமையை யாராலும் வரையறுத்துச் சொல்லமுடியாது. அதன் பெருமையை என் ஆசிரியரான வியாசமுனிவர் எனக்கு உரைத்தருளினர். அவர் உரைத்தபடியே யான் உங்களுக்குக் கூறுகிறேன்.

பிரும்ம கற்பத்தின் இறுதியில் பிரமதேவனால் இந்தச்சிவதலமும் தீர்த்தமும் அமைக்கப்பட்டன. பிறவிப்பிணியறுத்து, வீடு பெற நினைவோர் இந்தத் திருப்பதியிலேயே வாசஞ்செய்து கொண்டு, இங்குக் கோயில் கொண்டருளிய சற்குணநாதனை சிவாகம முறைபடி பூசனை செய்து வருவார்களாயின், இமய மலை முதலிய இடத்தில் நூறாண்டு தவம் செய்தவர்கள் அடையும் பயனை அடைந்து முத்திபெறுதல் திண்ணமாம். பிரமனால் அமைக்கப்பட்ட சீதபுட்

கரிணியில் நீராடுவோருடைய சஞ்சித முதலிய மூன்றுவினைகளும் தொலைந்து விடுகிறபடியால் அவர்களும் வீடு பேறடைவர். சீதபுட்கரிணியைக் கண்ணால் தரிசனை செய்தமாத்திரத்திலேயே, பல நன்மைகள் ஏற்படும். இந்திரனுடைய, அமராவதியி லுள்ள சதுர்த்தீர்த்தமும் மகிமையால் சீதபுட்கரிணி க்கு நிகராகமாட்டாது! என்று என் ஆசிரியர் எனக்குச்சொன்னார்.

ஓ துறவிகளே! இத்திருப்பதியைப் பற்றிய வரலாறுகளில், கிருதயுகத்தில் நிகழ்ந்த ஒன்றை உங்களுக்குக் கூறுகிறேன் கேளுங்கள்.

இளம் பருவத்திலேயே கடவுளிடத்துப் பத்திமைபூண்டு, சிறந்த சிவனடியார்களில் மார்க்கண்டேயரே தலைசிறந்தவர். அந்த மார்க்கண்டமுனிவரைப் பிடிக்கவந்த இயமனைச் சிவபெருமான், சிவலிங்கத் திருவுருவத்தினின்றும் தோன்றி உதைத்துக் கொன்றருளினார்; இவ் வரலாற்றை நீங்கள் பன்முறை கேட்டிருப்பீர்கள்; மேலே நிகழ்ந்ததைக் கூறுகிறேன் கேளுங்கள்.

மார்க்கண்டருக்காகச் சிவபெருமான் மறலி யைக்கொன்ற பிறகு, இம் மண்ணுலகத்தில் எந்த வுயிரும் இறப்பதில்லை. பிறப்புமட்டும் நிகழ்ந்து கொண்டேயிருக்க, ஒன்றேனும் இறப்பதில்லை

யாகலின், பூமிதேவியின் பாரம் மிகுந்தது. மரண பயம் இல்லாமையால், மனிதர்கள் பாவச்செயல்களைப்புரியவும் துணிந்தனர். இதனுல், துயரம் அடைந்த பூமிதேவி, நான்முகனிடம் முறையிட்டாள். நான்முகன், பூமிதேவியின் துயரத்தை போக்கத் தன்னிடத்தில் ஆற்றலில்லை, என்றும் இத்துயரத்தைப்போக்க எல்லாம் வல்ல இறைவனுகிய சிவபிரானுலேயே இயலும், என்றும், எண்ணிப் பூமிப்பிராட்டியையும், மற்றுமுள்ள இந்திரன் முதலிய தேவர்களையும் அழைத்துக் கொண்டு, சிவபிரானிருந்த மேருமலைக்குச் சென்ருன். அவ்விடத்தில் பிரமன் முதலியோர் சிவபெருமானைத்தியானஞ்செய்தமர்ந்தனர். இறைவன் அம்மையுடன், சிவகணஞ்சூழ விடையின் மேல் ஏறி, அந்தத் தேவர்களுக்குமுன் தோன்றி, அபயமளித்து உங்கள் குறையாது கூறுங்கள் என்று திருவாய் மலர்ந்தருளினுர். அவர்களுட் பூமிதேவி கடவுளை அடிவீழ்ந்து வணங்கி, ஓ பெருமானே! தாங்கள் மார்க்கண்ட முனிவருக்காக இயமனைக் கொன்றருளீர்களன்றோ! அன்று தொடங்கி, என்னிடத்தில் பிறக்கும் உயிர் ஒன்றுகூடச் சாவதில்லை; ஆதலால் அவற்றிற்கு உணவளிக்கும் ஆற்றலும் எனக்கு இல்லாதொழிந்தது. அவற்றின் பாரமிகுதியால், யான் மிகத் துயரம் அடைந்துள்ளேன். அடியாள்மீது தயைகூர்ந்து, என் துன்பத்தைத் துடைத்தருளல்வேண்டும்; என்ருன்.

பூமிதேவியின் வாசகத்தைக்கேட்ட இறைவன், புன்முறுவல்பூத்துப் பூமடந்தையே! அஞ்சவேண்டா! உன்குறையைத் தவிர்த்தருளுவோம் என்று கூறிச் சிறிதுநேரம் கண்முகிழ்த்து அமர்ந்திருந்தார். பின்னர்த் தென்றிசையில் ஒரு பெரிய ஒலி ஹோ! என்றெழுந்தது. சிவபிரானுடைய சேவடிபட்டு இறந்த இயமன் கணநேரத்தில் உருப்பெற்று உயிர்த்தெழுந்தான். அவனுடன், அவனுடைய தொண்டர்களான தூதரும், சித்ரக்குப்தன் முதலியோருந் தோன்றினர். அரஹர மஹா தேவ என்ற ஒலி கடல் ஒலிபோல் எழுந்தது. அனைவரும் இறைவன் முன் வந்தனர். இயமன், நீலகண்டனுடைய திருவடியில் வீழ்ந்து; சிவனடியாராகிய மார்க்கண்ட முனிவருக்குத்தான் செய்தபிழையை மன்னித்து அருளுமாறு பிரார்த்தனை செய்தான்.

காலகாலர், இயமனைநோக்கி ஓ மறலியே! நீ சிவனடியார்க்குச்செய்த பிழையை மன்னித்தேன்! இனி நீ சிவனடியாரிடத்தில் விழிப்புடன் நடந்து கொள்க! மரணமில்லாதபடியால், பூமியில் ஏற்பட்டிருக்கும் துன்பம் அகலும்படி இனி நீ உன் தொழிலைச்செய்க! என்றருளினர். இதனைக்கேட்ட இயமன், தந்தையே! தங்கள் திருவடி உதைபட்டமையால், என்னிடமிருந்த சத்தியெல்லாம் அகன்றது! நான் இப்போது வெறுங்கூடாகவே நிற்கின்றேன் என் கதாயுதத்தைத் தூக்கக்கூட என்னிடத்தில்

சத்தியில்லையே! அங்ஙனமாகவும் வலிமையால் செய்யத்தகுந்த என் தொழிலை யான் எவ்வாறு செய்வேன், என்று வணங்கினன். அப்பொழுது சிவபிரான், இயமனைநோக்கி, ஓ கூற்றுவனே! பண்டொருகாலத்தில் இதோநிற்கும்பிரமன், தனது சத்தியை இழந்து தவம்செய்தான்; அவன் தவஞ் செய்த வில்வவனத்தில், யாம் பிரமனுக்குப் படைக் கும் சத்தியை அளித்ததோடு, அந்த வில்வவனத்தில் சத்துவகுணமூர்த்தியாய் எழுந்தருளிய எம்மை வழி பாடு செய்யும் அடியவர்களுக்கு, இச்சை, ஞானம், கிரியை முதலிய மூன்று சத்தியையும் அருளு கின்றேம். ஆதலின், நீ வில்வவனத்திற் சென்று எம்மை ஒருதிங்கள்பூசனைசெய்து உனக்குவேண்டிய கிரியாசத்தியைப் பெற்றுக்கொள்! எனக் கூறி, மறைந்தருளினர். பிரமன் முதலியோர் இறைவ னுடைய திருவருட்பெருமையை வியந்து தங்கள் தங்கள் இடத்திற்குச் சென்றனர். இயமன், கட வுள் அருள்செய்தபடியே, செந்தமிழ் நாட்டிலுள்ள சிறந்த சத்துவகுண தலமாகிய வில்வவனம் அடைந்து, சிவாகமங்கூறிய முறைப்படி சற்குண நாயகரை ஆராதனைசெய்து, ஒரு திங்களில் கிரியா சத்தியைப் பெற்றான்.

கேளுங்கள் முனிவர்களே! கிரியாசத்தியைப் பெற்ற மறலி, பெரிதும் மகிழ்ச்சிகொண்டான். இத் திருப்பதியின் தென்கீழ்த்திசையில் ஒரு தீர்த்தம்

அமைத்து, அதில் நீராடுவோருக்கு மரணவேதனை இல்லாதிருக்கும்படி சங்கற்பம் செய்தான். அத்தீர்த்தம் இயமதீர்த்தம் என்று சொல்லப்படுகிறது. அதில் மூழ்குபவர்கள், மரணவேதனை அடைய மாட்டார்கள் என்பது திண்ணம். மேலும், உயிர்களுக்கு இன்றியமையாத இச்சாசத்தி முதலிய மூன்று சத்திகளையும் இத்திருப்பதி அளிக்கும் பெருமையுடையதென்று அறியக்கடவீர். இத்திருப்பதி, சத்திகளை அருள்வதுமன்றிப் பிதிர்முத்தியையும் தரும், என்று என் ஆசிரியர் உரைத்தருளினர் என்றார்.

## இரண்டாம் அத்தியாயம்

# பிதிர்முத்தி உரைத்தது

திருவிடும்பாவனம் என்னும் இத்திருப்பதி பிதிர் முத்தியைத் தரவல்லது என்று சூதர் சொல்லக் கேட்ட சனகர் முதலியோர், இத்தலம் பிதிர்முத்தியை எங்ஙனம் அளிக்கின்றது? அதனை விளக்க வேண்டும் என்றுகூற, மேலும் சூதமுனிவர் சொல்கின்றார்.

தென்புலத்தார், என்று சொல்லப்படுகின்ற பிதிரர்களை நோக்கி, அவர் மரபிற்பிறந்தோர் செய்யும் புண்ணியங்களின்பயன், பிதிரர்களின் பாவத்

தைப் போக்கி, அவர்களுக்கு முத்தியளிக்கும். பிதிரர்களுக்குச்செய்யவேண்டியவற்றைச் செய்தல் இல்லறத்தாருக்கு முதற் கடமையாகும். பிதிரர் நலம் குறித்துச்செய்யப்படும் தருமங்கள் க்ஷேத்திர மகிமையால் பெரிதும் பயன் அளிக்கும்; ஆதலால் பிதிர்க்கடன் செய்வதற்கென சிறந்த க்ஷேத்திரங் களையும், தீர்த்தங்களையும் கண்டுபிடித்துப் பெரி யோர்கள் சொல்லியிருக்கின்றனர். இந்த க்ஷேத் திரங்களைப் பிதிர்முத்தித் தலம் என்று ஞானிகள் சொல்கின்றனர். பிதிர்முத்தித் தலங்களில் இந்த திருவிடும்பாவனம் தலைசிறந்தது என்று, என் ஆசிரியர் எனக்குச் சொல்லிபிருக்கின்றார்.

கேளுங்கள் அன்பர்களே! இல்லறத்தாருக்கு முதற்கடமையாகின்ற பிதிர்க்கடனியற்ற, இவ் விடும்பவனம் சாலச்சிறந்ததாம். இறந்த தம் முன் னோரைக்குறித்து இத்தலத்தில் செய்யப்படுகின்ற மாகேசுவரபூஜை பலதலைமுறைக்குமுன்னர் இறந்த ஆத்துமாக்களையும் முத்தியில்சேர்க்கின்றது. மாகே சுவரபூஜையாவது மெய்யன்புடன் சிவனடியார்க்கு அன்னம் அளித்தலாம். தம்முடையமனதில் பிதிரர் களின் நாமத்தைச் சிந்தனைசெய்துகொண்டு அவர் கள் பெயரால் அருச்சனை செய்வித்தல், பிதிரர் களுக்கு முத்தியை நல்குவதாம். சிறப்பான நாள்களி லும் சிவபரமான விசேடதினங்களிலும் சற்குண நாதர், மங்களாம்பிகை, கணபதி, முருகன் முதலிய

தெய்வத் திருவுருவங்களை நீராட்டி, ஆடை மலர் முதலியவற்றால் அலங்காரஞ்செய்வித்துப் பிதிரர்களை எண்ணி சைவாகமமுறைப் பூசனைசெய்தல் வேண்டும். சிறந்த நாள்களாவன திருவாதிரை, பரணி, மகம், பூசம் முதலியன சிறந்ததிங்களாவன. வைகாசி, ஐப்பசி, தை முதலியன சிவபரமான விசேடநாட்கள். திங்கட்கிழமை, வெள்ளிக்கிழமை, சிவன்ராத்திரி முதலியன இந்நாட்களில் குறித்தோ, குறியாமலோ பூசனைசெய்வோருடைய பிதிரர்முத்தி அடைவர். மாகேசுவரபூஜை அருச்சனை விழா முதலியன செய்ய வியலாதவரும், தம் பிதிரர்களை நினைந்து சீதபுட்கரிணியில் வைகறையில் நீராடி தலவிருக்கமாகிய வில்வமரத்தின் கீழிருந்து, நூற்றெட்டுமுறை அல்லது ஆயிரத்தெட்டுமுறை திருவைந்தெழுத்தைப் பக்தியுடன் ஓதவேண்டும். ஓதினால் அவர்கள் பிதிரரும் முத்தியடைதல் திண்ணம்.

இத்திருப்பதியின் சிறப்புவிழாவை, ஓராண்டு நிகழ்த்திவைத்தவர்களுடைய இருபத்தொரு தலைமுறையிலுள்ள பிதிரரும் முத்தியடைவர் என்பர். தெரிந்தோ, தெரியாமலோ இத்தலத்திலிருந்து சிவராத்திரி முதலிய விசேடதினங்களில் உபவாசம் இருந்து, சீதபுட்கரிணியில் நீராடி சற்குணநாதனை வணங்கியவர்களுடைய பிதிரர் எல்லோரும் எல்லாப் பாவங்களினின்றும் விடுதலைபெற்று வீடுபேறடைகின்றனர்.

மூன்ரும் அத்தியாயம்

## தண்டபாணி சரிதம்.

பிதிர்முத்தியைத்தரும் இத்திருவிடும்பாவனத்தின் பெருமையை விளக்கும் வரலாறு ஒன்றுண்டு. அதனைச்சொல்வேன் கேளுங்கள், என்று சூதமுனிவர் மேலும் சொல்லத்தொடங்கினர்.

அன்பர்களே! பண்டொருகாலத்தில், இத்தண்டமிழ் நாட்டில் தண்டபாணி என்ற ஒரு செல்வன் வசித்துவந்தான். அவன் முன்னோர்கள் வைத்துப்போன செல்வமெல்லாம் மதுவருந்தியும், விலைமாதர்க்குக் கொடுத்தும், தீயவர்க்குக் கொடுத்தும் தொலைத்துவிட்டான். பின்னர், பொய்பேசுதல், வஞ்சித்தல், களவுசெய்தல் முதலிய தீய நெறிகளிற் சென்ருன். இவனுடைய தீச்செயலைக் காணச்சகியாத இவன் மனைவி மனம் வருந்தி நஞ்சுண்டு மாண்டாள். இவனை ஊர்மக்களும், உறவினரும் மிகவெறுத்தனர். ஆதலின் இவன் தன் ஊரைவிட்டுப் புறப்பட்டு நாடுசுற்றித் திரியலானுன். இவ்வாற்ருல் பல ஊர்களிலும் சுற்றித் திரிந்து, ஒரு நாள் இந்தத் திருவிடும்பாவனத்தை அடைந்தான்.

தண்டபாணி என்னும் இவன் இத்திருப்பதியை அடைந்தகாலத்தில், கதிரவன் உச்சியிலிருக்கும் பதினைந்து நாழிகையாயிருந்தது. வெப்பம் மிக்க கோடைக்காலம் ஆதலால் தண்ணென்றிருந்த சீத புட்கரிணியில் களைதீர நீராடலானுன். சீதபுட்கரிணியின் தெய்வத்தன்மை காரணமாக அவன் உள்ளத்

தில் ஒரு சாந்தியும், அறிவில் தெளிவும் பிறந்தன. ஆதலால் நீராடிக் கரையேறியவுடன் அவன் திருக்கோயில் வழிபாடு செய்தான். திருக்கோயிலில் எழுந்தருளிய சற்குணநாதனை உள்ளம் உருகத் துதித்தான். தானியற்றிய பாவச்செயல்களை மன்னித்துத் தனக்கு அருள்தரவேண்டும் என்று வேண்டித் திருக்கோயிலுள் ஒருபுறத்தில் அமர்ந்திருந்தான்.

அப்பொழுது கடவுளை வணங்கும் பொருட்டு ஒரு பரத்தை கோயிலுட்புகுந்து வலம் வந்தாள். அவள் இவ்விடும்பாவனத் திருப்பதியிலேயே விலைமாதர் குலத்தில் பிறந்தவள். ஆயினும் பண்டைப் பிறவியிலியற்றிய சிவபுண்ணிய மிகுதியால் இறைவனிடத்தில் இடையறு அன்புடையவளாய் இருந்தாள். தன் குலத்திற்குரிய வஞ்சகநெஞ்சம் அவளிடத்தில் இல்லை. பொருள்தந்து புணர்வாரிடத்து வஞ்சமும் பொய்யும் இன்றி அன்புடன் ஒழுகுவாள். திரிவேணி என்பது அவள் பெயர். அவள் திருக்கோயிலில் அமர்ந்திருந்த தண்டபாணியைக்கண்டு, இவர் ஒரு சிவனடியார்போலும் என எண்ணி, வணங்கி அவன் வரலாற்றை விசாரிக்கலானாள். இத்திருப்பதியின் மகிமையால் தூய்மையடைந்த தண்டபாணி, திரிவேணியினிடத்தில் தன் தீவினைகளை ஒளியாமல் உரைத்து, நங்கையே பாவியாகிய எனக்கும் பிராயசித்தம் உண்டோ! என்று வருந்திக்

கூறினான். திரிவேணி இரக்கங்கொண்டு, ஐயனே! அவலப்படாதே! நீசெய்த பாவத்திற்கு நீயே வருந்துகிறபடியால் அதுவே உனக்குப் பிராயசித்தமாகும். அஞ்சவேண்டா! என் முன்னோர்கள்தேடிய செல்வம் என்னிடத்தில் மிகுதியாக இருக்கிறது. நான் உனக்கு உண்டி உடை முதலியன தருகின்றேன். நீ என்வீட்டிலேயே இருந்துகொண்டு, நான் செய்து வரும் சிவத்தொண்டிற்கு மலர்பறித்தல், தொடுத்தல் முதலிய உதவிகளைச் செய்துவருக. என்னுடன் வருக! என்றனள். தண்டபாணி மிகவும் மகிழ்ந்து, இதுவும் இத்திருப்பதியிலுள்ள சற்குணநாதன் திருவருளே என்று நினைத்து, அன்று தொடங்கி அவளுடன் சிவத்தொண்டுசெய்யத் தலைப்பட்டான். நாளடைவில் இறைவன் அருளால் திரிவேணியும், தண்டபாணியும் அன்புடைய காதலராகிவிட்டனர். இருவரும், தவறுமல் சிவத்தொண்டுசெய்துவந்தனர். ஒவ்வொரு திங்கட்கிழமையிலும் உபவாசமிருந்தனர்; சிவராத்திரி விரதமும், பத்திசிரத்தையுடன் அநுட்டித்து வந்தனர்.

அன்பர்களே! காலந்தரத்தில் அவர்கள் பூதவுடல் நீத்துச் சிவபுண்ணிய மிகுதியால் சுவர்க்கலோகத்தை அடைந்தனர். அவர்களைச் சுவர்க்கலோகத்திற்கண்ட அவர்களின் பிதிரர் அனைவரும் அவர்களை அன்புடன் வரவேற்றுப் பின்வருமாறு கூறினர்:—

சிவநேசச் செல்வர்களாகிய, எங்கள் குலமணிகளே! இங்குக் கூடிநிற்கும் நாற்பத்திருவரும் உங்கள் இருவர்மரபிலும் உங்களுக்கு முன் தோன்றிய உங்கள் பிதிரர்கள் ஆவோம். நாங்கள்செய்த பல்வேறுவிதமான தீவினைகளின் பயனால், பல்வேறு நரகதுன்பத்தை நெடிது காலம் அநுபவித்தோம். நீங்கள் இருவரும் பிதிர்முத்தித் தலமாகிய திருவிடும்பாவனத்தில் இயற்றிய சிவபுண்ணியப் பேற்றால், உங்கள் இருவர்மரபிலும் இருபத்தொரு தலைமுறையிற் றோன்றிய நாற்பத்திருவரும் இன்று சாந்திமயமான இந்தச் சுவர்க்கவாழ்வைப் பெற்றோம். நீங்கள் நீடூழி வாழ்க; என்பது.

மாணக்கர்களே! இவ்வரலாற்றைக் கேட்டவர்களுடைய பிதிரரும், கூறுகிறவர்களுடைய பிதிரரும் முத்திபெறுவது நிச்சயம் என்று உணருங்கள். அகத்தியர் வரலாறு அறிந்தோர் இத்திருப்பதியை மணக்கோலநகர் என்று கூறுவர் என்றனர்.

### நான்காம் அத்தியாயம்

## குருமுனிக்குத் திருமணக் கோலங்காட்டியது.

சூதமுனிவரைச் சனகன் முதலியோர் வணங்கி அடிகளே! அகத்தியர் வரலாறறிந்தோர் திருவிடும்பாவனத் தலத்தை மணக்கோலநகர் என்று

வழங்குகின்றனர், என்று திருவாய்மலர்ந்தருளினீர்கள். அவ்வரலாறு என்னே? உரைத்தருள வேண்டும். என்று வேண்டினர். சூதமுனிவர், அகத்தியர் வரலாறு சொல்லத் தொடங்கினர்.

கேளுங்கள் துறவிகளே! முன்னொருகாலத்தில் மலையரையன் மகளாராகிய பார்வதி தேவியாரை சிவபிரான் திருமணஞ்செய்ய நினைந்தார். அத்திருமண விழாவைக் கண்டுகளிக்க அகில உலகத்தும் உள்ள இருடிகள், தேவர்கள் கருடர் கந்தருவர் சித்தர் வித்தியாதரர் முதலியோரும், கடல் நதி மலை காகனம் இவற்றின் அதி தேவதைகளும் இமயமலையில்வந்து ஒன்ருகக் குழுமினர். அதனல் பூமியின் வடபகுதி பாரமிகுதியாற்ருழ்ந்தது; தென்திசை உயர்ந்தது. நிலம் சமமின்மையால் உலகத்தில் பல்வேறு இன்னல்கள் ஏற்பட்டன. இவ்வின்னலைத்தவிர்த்தருளும்படி நான்முகன் முதலிய தேவர்கள் பரமசிவனரிடத்தில் குறையிரந்தனர்.

உலகில் நிகழ்கின்ற துன்பத்தைப் போக்கத் திருவுளங்கொண்ட பரமசிவனர், தன் திருமண விழாவிற்கு வந்திருந்த துறவியர்களில் தலைசிறந்த தவச்செல்வராகிய அகத்தியனரை அழைத்து, ஐய! நம் திருமணம் நிகழும்காலம் வரையில் இப்பூமி சமனிலை எய்தும்பொருட்டு, நீ தென்றிசை சென்று செந்தமிழ் நாட்டில் வசித்தல் வேண்டும்! ஓ

அகத்தியனே! நீ அளவில்லாத தவப்பெருமை உடையவன் ஆதலால் உன்னிறை பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் பொருளின் நிறைக்கும் சமானமாகும்! என் வேண்டுகோளுக் கிரங்கித் தென்றிசைக்கு இன்றே செல்க! என்று கூறியருளினர். இறைவனுடைய ஆணையைக்கேட்ட அகத்தியனர், மனம் பதைத்து, இறைவன் திருவடிகளில்வீழ்ந்து வணங்கி எம்பெருமானே! அடிகளார்க்கு எளியேன்செய்த பிழை என்னே! அடிகளாருடைய திருமணக்கோலங் காண என் கண்கள் தவம் செய்த தில்லையோ! திருமணக்கோலக் காட்சியை காணப் பெரிதும் அவாவுற்றுள்ள இக்கண்களைக்கொண்டு செல்லும் ஆற்றல் எனக்கு இல்லையே! எம்பெருமானுடைய கட்டளையை மறுக்கவும் இயலாதே! என்செய்வேன் என்று பரிந்து கூறினர். இறைவன் தமிழ் முனிவனை நோக்கிப் பெரியோய்! மனம் வருந்தாதே நீ என் விருப்பப்படி செந்தமிழ்நாடு சென்று அத் திருநாட்டில் எமக்கு மிகவும் விருப்பமான வில்வ வனத்தில் அமர்ந்திருப்பாய். இங்கு இமயவரையில் எமது திருமணம்நிகழும்போதே அவ்வில்வவனத்தில் நமது மணவிழாவை உனக்கு காட்டியருள்வோம், கவலை விடுக! மேலும் அந்த செந்தமிழ் நாட்டிலுள்ள வேறு தலங்களில், எம் உருவமாகிய அட்ட மூர்த்தத்தையும் காட்டியருள்வோம். இன்றே செல்க! என்று பணித்தார். ஆண்டவனுடைய

அருட்பெருக்கைவியந்து அகத்தியனார் தென்றிசை நோக்கிப் புறப்பட்டார். வருகின்ற வழியிலுள்ள அடர்ந்த காட்டில், வாதாபி, வில்வலன் என்னும் இரண்டு அசுரர்கள் அந்தணர்களுக்கும் தவத்தின ருக்கும் இடையூறுசெய்து நலிந்துவந்தனர். அவ் விருவரையும் தவவலிமிக்க தமிழ் முனிவன், ஹுங்காரத்தால் வதம்செய்து அந்தணர் முதலிய வர்களின் துன்பத்தை அகற்றினர். மேலும் வருகின்ற வழியில், கருவங்கொண்டு செஞ்ஞாயிற்று மண்டிலத்தின் செலவைத் தடுத்து நின்ற, விந்திய மலையின் வீறடக்கி அதனைப்பாதளத்தில் அழுத்தி, நிலமட்டம் செய்து செந்தமிழ்நாட்டை யடைந்து பல தலங்களையும் வணங்கித் திருவிடும்பாவனத் திருப்பதியை அடைந்து, சீதபுட்கரிணியில் நீராடி ஸ்ரீ சற்குணநாயகரை வணங்கி அமர்ந்திருந்தனர்.

பின்னர்ச் சிலநாளில், பரமசிவனார் திருமண நாள் வந்தெய்தியது. இறைவனுக்குத் திருமணம் நிகழும் அந்நல்லோரையில், இத்திருப்பதியிலிருந்த அகத்தியனார், நீராடி திருநீறு பூசிக் கண்டிகை அணிந்து, பக்திப் பரவசராய் சற்குணேசுரர் சந்நிதியை அடைந்து, கைமலர் குவித்துநின்றனர். இமயமலையில், சகல வைபவங்களுடன் திருமண விழாத் தொடங்க, அதே நேரத்தில், இறைவன் அருளால் அகத்தியனார் கண்முன் இத்திருப்பதி யிலும் அந்தக் காட்சி கண்கூடாகத் தோன்றியது.

மலர்க்கடவுளாகிய பிரமதேவன் மணவேள்வியை நடத்திஞன்; உலகிலுள்ள இருடிகள் முதலியோரும் சிவகணங்களும்சூழ எம்பெருமான் பார்வதிபிராட்டியோரோடு பல்வேறு வாத்தியமுழக்கங்களுக்கிடையே மணத்த விசேறியமர்ந்த காட்சிமுதல், மங்கலப் பொறிசிந்தி, அம்மி மிதித்து, அரசாணி வலம்வருங் காட்சிவரையில், இமயமலையில் நிகழ்ந்த எல்லாம் இடும்பாவனத்திலும், எம்பெருமான் அகத்திய முனிவர்க்குக் காட்டியருளினர்.

அன்பர்களே! அம்மையார் மங்கலக்கோலத்துடன் காட்சியளித்தமையால் **மங்களநாயகியார்** என்றுவழங்கப்பட்டனர். திருமணக்கோலங்காட்டப் பட்ட தலமாதலால் **மணக்கோலநகர்** என்று இத் திருப்பதி வழங்கப்படுகிறது.

கேளுங்கள் மாணவர்களே! இறைவனுடைய திருமணக்காட்சிபெற்ற அகத்தியனர், அளவில்லாத பத்தியுடையவராய் இத் திருப்பதியிலேயே ஆயிரம் ஆண்டுகள்யிருந்து தவஞ்செய்துவந்தனர். திருக்கோயிலின் தென்றிசையில் ஒரு தவச்சாலை அமைத்து, அதில் தவஞ்செய்துவந்தனர். அத்தவச் சாலையின் அருகே மகிமைமிக்க தீர்த்தம் ஒன்றை அமைத்தார். அத்தீர்த்தம் **அகத்தியதீர்த்தம்** என்று கூறப்படும். அத்தீர்த்த மகிமையால் அகத்தியனர், இத்திருப்பதியை அடைந்த, மாபாவிகளான இருவ

ருடைய அரக்கவுருவைப் போக்கித் தெய்வமேனி அளித்தனர். அவ்வரலாற்றை **இராக்கதமோக்கம்** என்றுகூறுவர். இராக்கதமோக்கத்தைக் கேட்பவர் எல்லாப் பாவங்களினின்றும் விடுதலைபெற்று மேன்மையடைவார்கள் என்று உரைத்தருளினர்.

ஐந்தாம் அத்தியாயம்

## இராக்கத மோக்கம்.

சனகாதிமுனிவர்கள் சூதமுனிவரை வணங்கி, ஐய! மகாமேன்மையுடைய இராக்கத மோக்கம் என்னும் வரலாற்றையும், உரைத்தருளல் வேண்டும். மகாபாவிகளான அந்த அரக்கர்கள் யார்? அவர்களுக்கு அகத்தியனர் தெய்வமேனி அளித்தது எங்ஙனம்? இவற்றை விரித்துரைத்தருளல் வேண்டும் என்று வேண்டச் சூதமுனிவர் சொல்கிறார்.

ஐயன்மீர்! இராக்கத மோக்கம் என்னும் இப்பகுதி வில்வவன மான்மியத்தில் மிகச்சிறப்புடைய பகுதியென்று, வியாசமுனிவர் எனக்குக் கூறினர். இப்பகுதியில் இத்திருப்பதி எப்படிப்பட்ட பாவத்தையும் அகற்றி ஆன்மாக்களை ஈடேற்ற வல்லதாகிற பெருமை விளக்கப்படுகிறது. பாவம் மிக்க இக்கலியுகத்தில், இத்திருப்பதி வழிபாட்டால் எத்தகையோரும் முத்தி பெறுதல்கூடும், என்ற துணிவை இப்பகுதி நமக்குத் தருகிறபடியால், இது

மேன்மையுடையதாம் என்று அறியக்கடவீர். அப்பகுதியைக் கூறுவேன் கேளுங்கள்.

அகத்தியனுர் தவஞ்செய்து இத்திருப்பதியில் வசித்துவந்தாரன்றே. அங்ஙனம் வசிக்கும் காலத்தில் ஒருநாள் ஆலயத்தினுள் ஓர் அரக்கனையும், அரக்கியையும் அகத்தியனுர் கண்டனர். அவர்களை அணுகி, அகத்தியனுர் நீங்கள் யார்? இங்கு ஏன் வந்தீர்கள்? என்று வினவினர். அதுகேட்ட அரக்கன், முனிவர்பாதத்தில் வீழ்ந்து வணங்கிக் கூறுகின்றான்.

"மாபெருந் துறவியே! அடியேன் ஓர் ஒப்பற்ற பாவி! அறிவில்லாமையால் அளவில்லாத பாபங்களைச்செய்தேன்; அவற்றின் பயனுகிய துன்பங்களை அனுபவிக்கின்றேன். என் செய்வது! நான் செய்த பாவங்களை இப்பொழுது நானே வெறுக்கின்றேன்! ஐயனே! நான் கலிங்கதேசத்தில் உள்ள ஒரு கிராமத்தில் ஒரு பார்ப்பனன் மகனுகப் பிறந்தேன். என்பெயர் தேவசருமன் என்பது. "பார்ப்பான் பிறப்பு ஒழுக்கம் குன்றக்கெடும்" அன்றே! அந்தணருக்கு இருக்கலாகாத பேராசை என் நெஞ்சம் நிறைந்திருந்தது. அப்பேராசை பிடர்பிடித்துந்த அம்மம்ம! அடியேன்செய்த பாவம் அளவிலாப் பெரும்பாவமாம்! பொய் கூறினேன்; வஞ்சித்தேன்; பிறர்பொருள் கவர்ந்தேன்; பிறர்

மனை நயந்தேன்; களவுசெய்தேன்; கொலை செய்தேன் ஆ! எத்தனை ஆயிரம் பாதகம்புரியற்றினேன்! இவ்வாறு பாதகம்செய்து பழகப்பழக, என்மனம் அரக்கத்தன்மை அடைந்தது. மேலும்மேலும் பாவமே செய்தமையால் என் உடலும் அரக்கவுருவம் பெற்றது. பார்ப்பனனாய்ப்பிறந்து, பாவஞ்செய்து அரக்கனாய்ப் பரிணமித்த மாபாதகன்நான்! ஈதோ நிற்கும் அரக்கி, என் காதலியாவாள். பாவச் செயலில் எனக்குநிகர் இவளே ஆவாள். ஓதுறவியே! ஏனோ கடவுள் எங்களை இவ்வாறு அமைத்தான்! ஏன் கடவுள் எங்களைக் கைவிட்டான்? எங்களுக்கு உய்தியும் உண்டோ? என்று கதறியழுதான். அவன்றன்மையை அறிந்த அகத்தியரும் துயரத்தால் கண்ணீருகுத்தார். கேட்பாய் தேவசருமனே! கடவுள் உங்களைக் கைவிடவில்லை. பாவஞ்செய்வோரை உறவினரே கைவிடுகின்றனர். கடவுள் எப்படிப்பட்ட பாவிகளையும் இகழ்ந்து கைவிடுவதில்லை. பாவிகளும் ஆண்டவனுடைய இருதயத்திலேதான் இடம்பெறுகின்றனர். ஓ தேவசருமனே! பாவஞ்செய்வோரைக் கடவுள் நேர்நின்று தண்டனைசெய்து திருத்தமுற்படார் அவர்கள் தீயநெறியிற் செல்வதை அவர் குறிப்பாகத் தடைசெய்கின்றார். அத்தெய்வக்குறிப்பை ஞானிகளே மதிப்பர். மற்றையோர் மதியாமல் தம் மனம்போகின்றவாறே ஒழுகுவர். இவர்களையும் கடவுள் வெறுப்பதில்லை. அவர்கள் உணர்ந்து தாமே திரும்பிவருவர்

என்பது அவருக்குத்தெரியும். அந்தப்பாவிகளின் மீட்சியைப் பெரிதும் கடவுள் விரும்பிப் பொறுமை யுடன் காத்திருக்கின்றார். நிறைந்த பாவமுடை யோரும் தாம்செய்த பாவத்தைத் தாமே உணர்ந்து, இனிக் கடவுளேகதி என்று மீள்வாராயின் அவர் பாவமெல்லாம் கதிரவன்முன் பனியேபோல் கணத் தில் மறைந்தொழியச் செய்வர் கடவுள், பரமபிதா கடவுள், கருணைக்கடல் ஆதலால் கடவுளிடத்துக் குற்றங்கூறவேண்டா! ஓ பார்ப்பனனே! உன்னைக் கடவுள் காப்பாற்றியருளவே கருத்துக் கொண்டுள் ளார். அதனால் அன்றோ எப்படிப்பட்ட பாவத்தை யும் அகற்றி மோக்ஷசாதனமாகிய சத்துவகுணத் தையே அளிக்கும் இத் திருவிடும்பாவனத்திற்கு நீங்கள் வரலாயினிர்! வந்ததும், பாவம் நீங்கி நீ சத்துவகுணப்பேற்றை அடைந்தாய் என்பது உன் பாவத்திற்கு நீயே வருந்துகின்ற செயலே காட்டும்; ஆதலால் அஞ்சவேண்டா! சற்குணநாதரின் தயவை யும் இத்தீர்த்தத்தின் பெருமையையும் இனி நீ காண்பாய்! என்று கூறியவாறே, தன் கமண்டலத் திலிருந்த அகத்திய தீர்த்தத்தை எடுத்து "ஓம் நமசிவாய" என்று உச்சரித்து, அந்த இரண்டு அரக்கர்கள் உடலிலும் தெளித்தார். தெளித்த உடனே, அந்த அரக்கர்கள் உருவம் மாறித் தேசு வீசும் தெய்வமேனியை அடைந்தனர். அவர்கள் திருவுருவத்தினின்றும் ஓர் ஒளிவட்டம் திகழ்ந்தது. இருவரும் வானத்தில் மிதந்து, முனிவனை வாழ்த்தித்

திருவைந்தெழுத் தோதியபடியே, தெய்வநாடுற் றனர். ஓ துறவிகளே! இராக்கதமோக்கம் என்னும் இப்பகுதியைக் கூறியபடியால் யானும் புண்ணியப் பேறடைந்தேன்; கேட்ட நீங்களும் புண்ணியப் பேறடைந்தீர்கள், என்று உரைத்தருளினர்.

### ஆறும் அத்தியாயம்

## யோகீச்சுரன் முத்திபெற்றது.

கேளுங்கள் முனிவர்களே! இடிவீழ்ந்திறத்தல், பாம்புதீண்டி இறத்தல், நஞ்சுண்டிறத்தல், தீய விலங்குகளால் இறத்தல் முதலிய இறப்பிற்கு ஆளானவர்களுடைய உயிர் நரகத்தையடைகிறது. அத்தகையோரை முத்திபெறச்செய்தல் அவர்கள் மரபிற் பிறந்தோருடைய கடமையாகும். முன்னொரு காலத்தில் யாகக்குதிரையைத் தேடிச்சென்ற சகரர் கள், கபிலருடைய கோபாக்கினியால் வெந்து சாம்ப ராயினர் அன்றே. அக்காரணத்தால் சகரர்கள் அறுபதினயிரவரும் நெடுங்காலம் நரகில் உழன்று துன்புற்றனர். அவர்கள் மரபில் பிறந்த, பகீரதன் என்பவன் மிகப்பெரிய முயற்சிசெய்து வானகங்கை யை அவர்கள் அஸ்தியில் கொண்டுவந்து பாய்ச்சி னன். அதனல் அந்தச் சகரர்கள் அனைவரும் முத்தி எய்தினர். அங்ஙனமே அஸ்தியைப் புண்ணியத் தீர்த்தத்திலிட்டு இறந்தவர்களுக்கு நன்மையுண்

டாக்குதல் நம்தேச வழக்கமாகும். அஸ்தியை இடு வதற்குரிய புண்ணிய தீர்த்தங்கள் கங்கை, காவிரி முதலிய நதிகள் ஆகும். அந்த நதிகளினும் சாலச் சிறந்தது. இத்திருவிடும்பாவனத் தலத்திலுள்ள சீதபுட்கரிணிஎன்று வியாசமுனிவர் எனக்குக் கூறி அருளினர். அஸ்தியை இடப்பட்டதனுல் இத்திருப் பதியில் முத்தியடைந்த ஒரு பிராமணனுடைய வர லாறும் உளது. அதைக் கூறுகிறேன் கேளுங்கள்.

முன் ஒரு காலத்தில் யோகீசுவரன் என்னும் பார்ப்பனன் தன் மனைவி மக்களுடன் இல்லறம் ஓம்பிவந்தான். ஒருநாள் பெருமழையுடன் கூடிய இடியேறுபட்டிறந்தான். இடிவீழ்ந்திறந்தமையால் அவன் நரகதுன்பத்தையடைந்தான். அவனுடைய மக்களில் சிறந்த குணமுடையவனும், மூத்தவனு மான குணபரன் என்பவன், தன் தந்தைக்கேற் பட்ட மரணத்திற்கும், அதன் காரணமாக அவன் நரகம்புகுவான் என்ற ஐதீகத்திற்கும் வருந்தி, தந்தையை முத்திபெறச் செய்யவேண்டும் என்று பெரியோர்களையடைந்து, தன் தந்தையை எப்படி முத்திபெறச் செய்யலாம் என்று வினவினன்.

சாஸ்திரங்களை நன்ருக ஓதிய ஒருசான்றேன், குணபரனுக்குப் பின்வருமாறு கூறினன்.

தந்தையின்பொருட்டு இங்ஙனம் முயலுகின்ற உன்செயல் மிகநன்று, உன் தந்தையை நரகத்தி

னின்றும் விடுதலைசெய்வது உன் கருத்தாயின் நீ பகீரதனையே ஒக்கின்றாய்! பகீரதனைப்போல நீ முயன்றால் உன் தந்தையை நீ காப்பாற்றுவது திண்ணம். குணபரனே கேள்! இத்தமிழ் நாட்டில் மிகச்சிறந்த தீர்த்தம் ஒன்றிருக்கின்றது. அதனை நீ உன் முயற்சியாற் கண்டுகொள்ள வேண்டும். அதற்கு ஒரு உபாயங்கூறுவேன், அதாவது; உன் தந்தையின் அஸ்தியைத் தூய புதுமண்பாண்டத்தில் வைத்து அதனை எடுத்துக்கொண்டு இத்தமிழ் நாட்டிலுள்ள சிறந்த திருக்கோயில்களுக்கெல்லாம் நீ செல்லவேண்டும். அந்தத்தலங்களில் உள்ள தீர்த்தங்களில் அஸ்தியிட்ட மண்பாண்டத்தையிட்டு நீராடியபின் மீண்டும் அதனைநீரினின்றும் எடுத்துப் பார். அப்பாண்டத்தில் உன் தந்தையின் உருவம் தோன்றினால், உன் தந்தை நரகினின்றும் விடுதலை பெற்றான், என்று அறிந்துகொள். அங்ஙனம், உருவக்காட்சி உனக்குக் கிடைக்கும்வரையில், நீ இம்முயற்சியைவிடாது செய்தல்வேண்டும்என்றான். தநயன் மகிழ்ந்து, தலங்கள்தோறும் அஸ்தியுடன் யாத்திரைசெய்தான். அங்கங்குள்ள தீர்த்தங்களில் மண்பாண்டத்துடன் தந்தையின் அஸ்தியை வைத்துப் பின்னர் எடுத்து ஆவலுடன் நோக்குவான்.

பல தலங்களில் பாண்டத்துள் இருந்த அஸ்தியைத் தவிர பிறிதொன்றும் காணாது ஏங்கினான். திருமுதுகுன்றத்தில் அஸ்தி பொன்னாகக் காட்சி

நல்கியது. திருமறைக்காட்டில் அஸ்தி தாமரை மலராகக் காட்சி தந்தது. இக்காட்சிகள் குணபர னுக்குத் திருப்திதரவில்லை. மேலும் யாத்திரையில் முயன்ருன். திருக்கடிக்குளத்தில் அஸ்தி கொன்றை மாலையாய்த் தோன்றியது. தநயன் அஸ்திப் பாண்டத்துடன் திருவிடும்பாவனம் என்னும் திருப் பதியை அடைந்து சீதபுட்கரிணியில் அஸ்தியை வைத்து நீராடியபின் மீண்டும் பாண்டத்தை வெளி யில் எடுத்து நோக்கினன்; பாண்டத்தினுள் அவன் தந்தை யோகீசுவரனுடைய திருவுருவம் நன்ருகக் காட்சியளித்தது.

அத்தோற்றத்தால் மனமகிழ்ந்த குணபரன், மீண்டும் திருவைந்தெழுத்தோதிச் சீதபுட்கரிணி யிலேயே அந்த அஸ்திக் கலயத்தையிட்டுக் கரை யேறினன். அங்குக் கோயில்கொண்டுள்ள சற்குண நாதனையும், மங்களவல்லியாரையும் நீராட்டல் முதலியன செய்வித்து மலர் ஆடை முதலியவற்ருல் அலங்காரஞ் செய்வித்து, ஆராதனை செய்தான். அந்நாள்முழுதும் இடும்பாவனத்திருப்பதியிலேயே உபவாசமிருந்து, ஆலயத்துள் நிலத்திற் படுத்து நித்திரைசெய்தான். நித்திரையில் ஆழ்ந்தவுடன், அவன் தந்தையினுடைய ஆவி, அவன் கனவில் விளக்கமாகத் தோன்றி, "என் அருமைமைந்தனே! இடியினல் இறந்த நான் இதுவரையில் நரகத்தில் உழன்று துன்புற்றேன். நன்மகனுகிய நீ செய்த

முயற்சியால் நரகவாழ்க்கை அகன்றது. இன்று அந்தமில்லாப் பேரின்பப் பெருவாழ்வடைந்தேன்; நீ நீடூழி வாழ்க" என்று வாழ்த்தி மறைந்தது.

அன்பர்களே! திருவிடும்பாவனம் என்னும இந்த வில்வவனத்தின் மான்மியம் யாராலும் சொல்ல வியலாதது என்று உணர்தல்வேண்டும். அப்பெருமையில் என் அறிவிற்கெட்டியவரையில் சிலவற்றை உங்களுக்குச் சொன்னேன். இதைக் கேட்ட நீங்கள் **ஸ்ரீமங்களவல்லி சமேத ஸ்ரீசற்குண நாதர்** திருவருளுக்குப் பாத்திரராய் நெடிது வாழக் கடவீர்.

**வாழ்க அந்தணர் வானவ ரானினம்**
**வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக**
**ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே**
**சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.**

திருச்சிற்றம்பலம்.



[illegible]